மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 120* பிப்ரவரி *2026*

## யாக்கோபு மற்றும் லாபானின் பிரிவு – அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதல்

**ஆதி. 31**

***PT# 460, Jul-Aug 1962, pp. 51-54***

*1.* **பொ**துவாகவும் சுருக்கமாகவும் கூறினால் ஆதியாகமம் *31*-ம் அதிகாரத்தின் நிஜ நிறைவேறுதலானது, *1846*-ம் வருடம் முதல், விசேஷமாக *1874* முதல் *1916* வரையுள்ள காலத்தில் நிகழ்ந்த அறுவடையிலும் விழுகதிர் பொறுக்குதலிலும், தேவனுடைய உண்மையான ஜனங்கள் அவருடைய பெயரளவிலான ஜனங்களிடமிருந்து பிரிந்து போவதைக் குறிப்பிடுகிறது *(E Vol. 10, p. 601)*. *1846*-ம் வருடத்தில் இவான்ஜ்ஜலிக்கல் அலையன்ஸ் *[Evangelical Alliance]* உருவாகி வாசஸ்தலம் சுத்திகரிக்கப்பட்ட பிறகும், விசேஷமாக *1874*-ல் அறுவடை தொடங்கிய பிறகும், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (நிஜ நிறைவேறுதலான யாக்கோபு) அதிக ஆதரவாளர்களைப் பெற்றுக் கொண்டு அதிக மதிகமாகச் செழிப்படைந்தார்கள்.

*2.* ஆதி. *31:1,2* பின்பு, லாபானுடைய குமாரர்: எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்தச் செல்வத்தையெல்லாம் அடைந்தான் என்றும் சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்டான். லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்தபோது, அது நேற்று முந்தைநாள் இருந்ததுபோல் இராமல் வேறுபட்டிருக்கக் கண்டான். அவ்வாறு நடந்து கொண்டிருக்கும் போது [தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் செழிப்படைந்து கொண்டிருக்கும் போது], தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களைக் கட்சி பற்றுடன் ஆதரிக்கிறவர்களில் பிரதானமானவர்கள் (லாபானுடைய குமாரர்) பொறாமையோடு முறுமுறுப்பதை அதிகமதிகமாகக் கேள்விப்பட்டார்கள் (யாக்கோபு கேட்டான்). அவர்கள் பின்வரும் காரியங்களைக் குறித்து முறுமுறுத்தார்கள் *(1)* தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பெயரளவிலான ஜனங்களின் தலைவர்களின் ஆதரவாளர்கள் அனைவரையும் எடுத்துக் கொள்கிறார்கள் (எங்கள் தகப்பனுக்கு உண்டான யாவையும் யாக்கோபு எடுத்துக் கொண்டான்), *(2)* தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் ஆதரவாளர்களில் பெரும்பான்மை



யோர் ஏற்கனவே பெயர் சபையின் அங்கத்தினர்களாக இருந்தார்கள் (எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்த செல்வத்தையெல்லாம் அடைந்தான், *1*சாமு. *18:6-9* வரையுள்ள வசனங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும்; *E Vol. 9, pp. 576, 577*). பெயரளவிலான ஜனங்களின் தலைவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கு முற்காலத்தில் காண்பித்த தயவை இப்போது காண்பிக்காததை அவர்கள் உணர்ந்தார்கள் (லாபானின் முகம்….

### தூது நிரல்

*1.* யாக்கோபு மற்றும் லாபானின் பிரிவு.............*1*
*2.* தேவனுடைய கிரியைகள் மற்றும் வார்த்தை..........................................................*10*
*3.* ஞானம் மற்றும் துக்கம் ...................................*15*
*4.* உங்கள் கல்வி இவைகளில் குறைவுபட்டிருக்கிறதா?...............................*17*

நேற்று முந்தைய நாள் இருந்தது போல் இராமல் வேறு பட்டிருக்க கண்டான்).

3. ஆதி. 31:3 கர்த்தர் யாக்கோபை நோக்கி: உன் பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன் என்றார். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் (யாக்கோபு) காலத்திற்குரிய சத்தியம் படிப்படியாகவும் அதிகமதிகமாகவும் தெளிவாகிக் கொண்டு வந்தது. சத்தியம் அவ்வாறு தெளிவாகிக் கொண்டிருக்கையில், அந்த சத்தியத்தின் மூலம் தேவன் அவர்களுக்குப் பின்வரும் காரியங்களைச் சொன்னார் (கர்த்தர் யாக்கோபை நோக்கி): (1) யூத யுக அறுவடை காலத்தில் யெஷுஆவும் அப்போஸ்தலர்களும் வாசம் பண்ணின சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லைக்கு அவர்கள் திரும்ப வர வேண்டும் (உன் பிதாக்களுடைய தேசத்திற்கு... திரும்பி போ), (2) சுவிசேஷ யுக அறுவடை காலத்தின் இந்த ஊழியக்காரர்கள் விசுவாசம் மற்றும் ஆவியின் ஒருமைப்பாட்டில் யூத யுக அறுவடையின் ஊழியக்காரர்களோடு நெருங்கிய உறவுடையவர்களாக இருந்தார்கள் (உன் இனத்தாரிடத்திற்கு; எபே. 4:3,13), (3) அவர்கள் அவ்வாறு செய்யும் போது, தேவன் அவர்களோடு இருப்பார் என்று அவர்களுக்கு உறுதியளித்தார் (நான் உன்னோடே கூட இருப்பேன்). தேவன் அவர்களுக்கு இந்த காரியங்களைச் சத்தியத்தின் மூலம் 1846-ம் வருடத்திலிருந்து சொல்லத் தொடங்கி (யாத். 4:27; E Vol. 11, p. 54), அறுவடை காலம் நெருங்கி வருகையிலும் (E Vol. 9, pp. 517-519) 1874-ம் வருடத்தில் அறுவடை தொடங்கின பிறகும் விசேஷமாகச் சொன்னார் (E Vol. 5, pp. 169, 170). மேலும் 1878 முதல், தேவனால் புறக்கணிக்கப்பட்ட பாபிலோனை விட்டு வெளியேறுவதற்கான அழைப்பு கொடுக்கப்பட்டதிலிருந்து (வெளி. 18:4) இது இன்னும் விசேஷமாக நடந்தது.

4. ஆதி. 31:4 அப்பொழுது யாக்கோபு, ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தையிடத்தில் அழைப்பித்து, ... இதற்கிணக்கமாக, தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் சத்திய செய்தியின் மூலம், ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களையும் (ராகேல்), அதிகமாகவோ குறைவாகவோ தப்பறைகள் கலந்த உக்கிராண சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களையும் (லேயாள்) அழைத்தார்கள். அவர்கள் வந்து, சத்திய ஊழியத்தின் செயல் எல்லையில் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களோடு கலந்தாய்வு செய்ய அவர்களை அழைத்தார்கள் (வெளியிலே... அழைப்பித்து). இந்த சத்திய ஊழியத்தின் செயல் எல்லையில், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் தேவனுடைய ஜனங்களை வழிநடத்திக்கொண்டு இருந்தார்கள் (தன் மந்தையிடத்தில்). அந்த அழைப்புக்கு அநேகர் பிரதிகிரியை செய்தார்கள்.

5. ஆதி. 31:5 அவர்களை நோக்கி: உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தைநாள் இருந்தது போல இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது; ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பின்வரும் உண்மையை ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களையும், தப்பறைகள் கலந்த உக்கிராண சத்தியங்களையும் பிரயோகிப்பவர்களின் (ராகேல் மற்றும் லேயாள்) விசேஷித்த கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்: தேவனுடைய பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கு முற்காலத்தில் தயவு காண்பித்ததைப் போல் இப்போது காண்பிப்பதில்லை (உங்கள் தகப்பனுடைய முகம்...இருந்தது போல் இருக்கவில்லை). ஆனால் மனுஷருடைய தயவைப் பார்க்கிலும், ஆம் ஜீவனையே பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதான தேவனுடைய தயவு (சங்.63:3) அவர்களோடு இருந்தது, தொடர்ந்து அவர்களோடே இருந்து அவர்களை செழிப்படையச் செய்கிறது (என் தகப்பனுடைய தேவன் என்னோடே கூட இருக்கிறார்).

6. ஆதி. 31:6,7 என்னால் இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ்செய்தேன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்கள் தகப்பனோ, என்னை வஞ்சித்து, என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனாலும் அவன் எனக்குத் தீங்குசெய்ய தேவன் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை. ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களையும், தப்பறைகள் கலந்த உக்கிராண சத்தியங்களையும் பிரயோகிப்பவர்களுக்கு (ராகேல் மற்றும் லேயாள்), தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) பின்வரும் காரியங்களை நினைவுப்படுத்தினார்கள்: (1) அவர்களும், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும் சுவிசேஷ யுக இடைப்பட்ட காலத்தில் பெயர் சபையின் பிரதான தலைவர்களுக்கு முழு மனதோடும், முழு இருதயத்தோடும் ஊழியஞ் செய்திருந்தார்கள் (என்னால் இயன்ற மட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ் செய்தேன்). (2) ஆனால் இந்த பெயர் சபையின் தலைவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களைத் தந்திரமாக வஞ்சித்தார்கள் (என்னை வஞ்சித்து). (3) அவர்கள் ஊழியத்தைத் தொடங்குவதற்கு முன் ஒப்பந்தம் செய்த காரியங்களை, வேலை முடிந்த பிறகு பலமுறை மாற்றினார்கள் (என் சம்பளத்தை... மாற்றினான்). (4) கிறிஸ்தவ மண்டலத்தின் பத்து மதப்பிரிவு வகுப்புகளாகிய நிஜ நிறைவேறுதலான ரூபன், சிமியோன், லேவி, யூதா, தாண், நப்தலி, காத், ஆசேர், இசக்கார், செபுலோன் என்ற மதப்பிரிவுகள் சம்பந்தமாக அவ்வப்போது இதைச் செய்தார்கள் (பத்து முறை மாற்றினான்). (5) இருந்தாலும் இந்த தலைவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கு எவ்வித உண்மையான தீமையையும் விளைவிக்கத் தேவன் அனுமதிக்காதிருந்தார் (அவன் எனக்குத் தீங்கு செய்ய தேவன் அவனுக்கு இடங் கொடுக்கவில்லை). மாறாக தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அநேகரை தங்களுடைய ஆதரவாளர்களாக ஆதாயப்படுத்திக் கொண்டார்கள். இவ்வாறு அவர்கள் ஆதாயப்படுத்தப்படாதிருந்தால், அவர்கள் பெயர் சபையின் தலைவர்களைப் பின்பற்றியிருப்பார்கள் (எண்.14:22; E Vol. 9, p. 221).

7. ஆதி. 31:8,9 புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது; கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் கலப்பு நிறக் குட்டிகளைப் போட்டது. இவ்விதமாய் தேவன் உங்கள் தகப்பனுடைய ஆடுகளை எடுத்து, எனக்குத்தந்தார். ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களையும், தப்பறைகள் கலந்த உக்கிராண சத்தியங்களையும் பிரயோகிப்பவர்களிடம் (ராகேல் மற்றும் லேயாள்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) இவ்வாறு சொன்னார்கள்: தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் செய்த ஊழியத்தின் சம்பளமாகப் பெயர் சபையின் பிரதான தலைவர்கள் (லாபான்) "பழைய வழக்கத்திலிருந்து மாற்றத்தை விரும்புகிற" *(unorthodox)*

விசுவாசிகள் (புள்ளியுள்ளவைகள் மற்றும் கலப்பு நிறமானவைகள்) அவர்களுக்கு ஆதரவாளர்களாக ஆகும் படி விட்டுவிட ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அவ்வித மான விசுவாசிகளில் எவ்வகையானவர்களைக் கொடுக்க அவர்கள் ஒப்பந்தம் செய்திருந்தாலும், விளைவு எப் போதுமே ஒன்றாகவே இருந்தது. "பழைய வழக்கத் திலிருந்து மாற்றத்தை விரும்புகிறவர்களில்" பெரும் பான்மையோர் பெயர் சபையை விட்டு வெளியே வந்தார் கள் (குட்டிகளைப் போட்டது). இவ்வாறாகச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் தேவன் பெயர் சபையின் தலைவர் களின் ஆதரவாளர்களை எடுத்துக்கொண்டு அவர்களைத் தம்முடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் கொடுத் தார் (தேவன் உங்கள் தகப்பனுடைய ஆடுகளை எடுத்து எனக்குத் தந்தார்).

8. ஆதி. 31:10-12 ஆடுகள் பொலியும் காலத் திலே நான் கண்ட சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, ஆடுகளோடே பொலியும் கடாக்கள் கலப்புநிறமும் புள்ளியும் வரியும் உள்ளவை களாயிருக்கக் கண்டேன். அன்றியும் தேவதூதன் ஒருவர் சொப்பனத்தில்: யாக்கோபே என்றார்; இதோ, இருக் கிறேன் என்றேன். அப்பொழுது அவர்: உன் கண்களை ஏறெடுத்துப்பார்; ஆடுகளோடே பொலியும் கடாக் களெல்லாம் கலப்புநிறமும் புள்ளியும் வரியுமுள்ளவை களாய் இருக்கிறது; லாபான் உனக்குச் செய்கிற யாவை யும் கண்டேன். தேவனுடைய விசேஷித்த ஊழியக் காரர் கள் பின்வரும் காரியத்தையும் சொன்னார்கள்: (a) 1846 -ம் வருடம் முதல் புது விசுவாசிகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக (ஆடுகள் பொலியும் காலத்திலே), வேதாக மத்திலிருந்து கூடுதலான காலத்திற்குரிய சத்தியத்தை விசேஷமாக அறுவடை சத்தியத்தை அவர் களுக்கு வெளிப்படுத்துவதின் மூலம் (சொப்பனத்தில்), நம் முடைய கர்த்தர் (தேவ தூதர் ஒருவர்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களில் விசேஷித்த கவனத்திற்கு, பின்வரும் காரியத்தைக் கொண்டு வந்தார்: தேவனுடைய குறித்த காலம் வந்திருப்பதால், தேவனுடைய ஜனங்களின் (பழைய வழக்கத்தை மாற்ற விரும்புகிற - கலப்புநிறமும் புள்ளியும் வரியும் உள்ளவைகள்) போதகர்கள் பெரிய எண்ணிக்கையில் உருவகமான பிள்ளைகளைப் பெற் றெடுப்பார்கள். இவ்வாறாகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கு அவர் பல ஆதரவாளர்களைக் கொடுப்பார்கள் (உன் கண்களை ஏறெடுத்துப் பார், ஆடுகளோடே பொலியும் கடாக்களெல்லாம் கலப்பு நிறமும் புள்ளியும் வரியுமுள்ளவைகளாய் இருக்கிறது). பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் சுவிசேஷ யுக இடைப்பட்ட காலத்தில் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களை வஞ்சித்து ஏமாற்றினதையும், தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருப்பதையும் தேவன் நன்றாக அறிந்திருந்தார் (லாபான் உனக்குச் செய்கிற யாவையும் கண்டேன்).

9. ஆதி. 31:13 நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தே லிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே; இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார் என்றான். தேவனுடைய விசேஷித்த ஊழியக் காரர்கள் பின்வரும் காரியத்தையும் சொன்னார்கள்: (b) இந்த சத்தியத்தின் மூலம் (சொப்பனத்தில்), எடுத்துக் காட்டாக 1874-ம் வருடத்திற்குக் கொஞ்சம் காலத்திற்கு முன்பும், அதற்குப் பிறகும் மீட்கும் பலியைப் பற்றிய சத்தியத்தின் மூலம் தேவன் அவர்களுக்குப் பின்வரும் காரியத்தை வெளிப்படுத்தினார்: யூத யுக அறுவடை காலத்தில் தேவனுடைய வீட்டின் மேல் ஆளுகை செய்த அதே தேவனாக அவர் இப்போதும் இருக்கிறார் [நான் பெத்தேலின் (தேவனுடைய வீடு) தேவன் - KJV பார்க் கவும்)]. யூத யுக அறுவடையில் இந்த வகுப்பாரைச் சேர்ந்த மற்றவர்கள் (அப்போஸ்தலர்கள் முதலியவர்கள்) இதே மீட்கும் பலியின் போதனையை என்றென்றைக்கும் நினைவு கூறப்பட வேண்டிய மேன்மையான கோட் பாடாக நிலைநாட்டி (தூண்) பரிசுத்தமாக்கினார்கள் (அபி ஷேகம் செய்து). மேலும் அவர்கள் தேவனுக்கு உண்மை யாயிருக்கும்படி ஆர்வமாகப் பொருத்தனைகளைச் செய்திருந்தார்கள் (எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி, ஆதி 28: 16 - 22 வரையுள்ள வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

10. தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) பின்வரும் காரியத்தையும் சொன்னார்கள்: அவர்கள் இப்போது எழுந்து (இப்போது நீ எழுந்து) பெயர் சபையையும் அதின் தப்பறையான மற்றும் சுயநலமான செயல் எல்லையையும், அதின் ஊழியத் தையும் விட்டுவிட்டு (இந்த தேசத்தை விட்டு புறப்பட்டு – ஏசா. 52: 1,2,11 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்), யூத யுக அறுவடையில் அவர்களுடைய சகோதரர்கள் மகிழ்ச்சியோடு அனுபவித்திருந்த சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லைக்குத் திரும்ப வர வேண்டு மென்று (உன் இனத்தாரிலிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ) தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

11. ஆதி. 31:14,15 அதற்கு ராகேலும் லேயாளும்: எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ? அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்படவில்லையா? அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக்கொண்டார். நிஜ நிறைவேறுதலான யாக்கோபு தெரிவித்த இந்தக் காரியங்களுக்கும், விசேஷமாகப் பெயர் சபையையும் அதின் ஊழியத்தையும் விட்டுவிட வேண்டுமென்ற கட்டளைக்கும், நிஜ நிறைவேறுதலான ராகேல் மற்றும் நிஜ நிறைவேறுதலான லேயாள் மீது மிகுந்த தாக்க மிருந்தது. இந்த இரு வகுப்பார்களிலும் சத்தியத்தை விசுவாசித்து, கீழ்ப்படிதலோடு அதைக் கேட்டவர்கள் அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் இவ்வாறு பதிலளித்தார்கள்: பெயர் சபையிலுள்ள மத குருமாரின் ஆதிக்கத்தின் கீழ் அவர்கள், இக்காலத் திற்கும், வருங்காலத்திற்கும் எவ்வித ஆவிக்குரிய நன்மைகள் மற்றும் அனுகூலங்களைக் குறித்து நம்பிக் கைக் கொள்ளக் கூடும்? (எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ?). மேலும் அவர்கள் "பழைய வழக்கத்திலிருந்து மாற்றத்தை விரும்பு கிற" போதனைகளை ஏற்றுக் கொண்டதினாலும், தேவ னுடைய விசேஷித்த ஊழியக்காரர்களோடு நெருங்கிய பந்தமும் ஐக்கியமும் கொண்டதினாலும் ஆவியிலும் கோட்பாட்டிலும் பெயர் சபையிலுள்ளவர்களுக்கு அந் நியர்களாக அந்த சபையின் முக்கியமான தலைவர்களால் ஏற்கனவே கருதப்படுகிறார்கள் அல்லவா? (அவரால் நாங் கள் அந்நியராய் எண்ணப்படவில்லையா?) மதகுருமார் பற்றுடைய இந்த தலைவர்கள் (லாபான்) வியாபாரத் திற்காக அவர்களை உபயோகித்து (அவர் எங்களை விற்று), தங்களுக்குரிய செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காகத், தேவனுடைய விசேஷித்த ஊழியக் காரர்களுக்கும் (யாக்கோபு) சத்தியங்களை உபயோகிப் பவர்களுக்குமுரிய (ராகேல் மற்றும் லேயாள்) காரியங்

*களை அபகரித்துக் கொண்டார்கள் (எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக் கொண்டார்; ஏசா. 52: 3 -6; ஆமோ. 2:6 - ம் வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).*

*12. ஆதி. 31:16 ஆகையால் தேவன் எங்கள் தகப்பனிடத்திலிருந்து எடுத்த ஐசுவரியம் எல்லாம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியது; இப்படியிருக்க, தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும் என்றார்கள்.* ஆகையால் தேவன் பெயர் சபையின் தலைவர்களிடமிருந்து *(லாபான்)*எடுத்துக் கொண்டு, அவருடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குக் *(யாக்கோபு)* கொடுத்திருந்த உதவியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரும் *(தேவன் எங்கள் தகப்பனிடத்திலிருந்து எடுத்த ஐசுவரியமெல்லாம் – ஆதி. 30:43 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்)* நியாயமாக இந்த விசேஷித்த ஊழியக்காரர்களுக்கும்*(யாக்கோபு)*, சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களுக்கும் *(நமக்கும் -ராகேல் மற்றும் லேயாள்)* அவர்களோடு ஒத்துணர்வு கொள்பவர்களுக்கும் *(நம்முடைய பிள்ளைகளுக்கும்)* உரியவைகளாக இருக்கின்றன *(உரியது)* என்று அவர்கள் கருதினார்கள். ஆகையால் தேவனுடைய இந்த விசேஷித்த ஊழியக்காரர்கள் *(யாக்கோபு)* அவருடைய கட்டளைகளெல்லாவற்றையும் பின்பற்ற வேண்டுமென்று அவர்களை உற்சாகப்படுத்தினார்கள் *(தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும்)*. இவ்வாறாகப் பெயர் சபையையும் அதின் ஊழியத்தையும் விட்டுவர ஒத்துக் கொண்டார்கள்.

## யாக்கோபு பதான் அராமை விட்டு செல்வது

*13.* தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களுடைய ஆதரவாளர்களுடன் பெயர் சபையையும் அதின் ஊழியத்தையும் விட்டு செல்வதென்பது *(a) 1846* முதல் *1874* வரையுள்ள காலத்தில் முதல் முதலாகத் தொடங்கினது, *(b) 1874* முதல் *1878* வரையுள்ள காலத்தில் மேலும் முன்னேற்றமடைந்தது, *(c)* அதின் முக்கியமான பகுதி *1878* ஆம் வருடத்தில் பாபிலோன் தேவனால் புறக்கணிக்கப்பட்ட பிறகு தொடங்கினது. மேலும் அறுவடை காலத்தின் அறுப்பும் விழுகதிர் பொறுக்குதலும் முன்னேற்றமடைந்து முடிவுக்கு வரும் வரை, அதாவது *1914 -1916* வரை தொடர்ந்து நடைபெற்றது. நாம் இங்கே அதை *(c)* என்ற கண்ணோட்டத்திலிருந்து கருதுவோம்.

*14. ஆதி. 31:17,18 அப்பொழுது யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளையும் தன் மனைவிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றி, தான் பதான் அராமிலே சம்பாதித்த மிருகஜீவன்களாகிய மந்தைகள் அனைத்தையும் தன் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, கானான்தேசத்தில் இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்குப் போகப் புறப்பட்டான்.* தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள், அதாவது பாஸ்டர் ரஸல் மற்றும் படிப்படியாக அவரோடு சேர்ந்து கொண்ட ஐந்து விசேஷித்த உதவியாளர்கள் *(E Vol 13 p.16)* பின் வரும் காரியங்களைச் செய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபடத் தொடங்கினார்கள் *(யாக்கோபு எழுந்து)*: பரூஷியா காலத்தின் சிறுமந்தை வகுப்பாரும் *(யோசேப்பு)*, பிரதிஷ்டை செய்யவில்லையென்றாலும் அவர்களோடு ஒத்துணர்வு கொள்கிற மற்றவர்களும் *[மற்ற பிள்ளைகள்]* பரூஷியா காலத்திற்குரிய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப் படுதலின் சத்தியங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் , உக்கிராண சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் *(தன் மனைவிகள்)* பிரயாணம் செய்வதற்கு அவர்களிடம் இருக்க வேண்டிய மற்றும் அவர்கள் உபயோகிக்க வேண்டிய பரிபாலன உதவிகளை *(ஒட்டகங்கள் - ஸ்தாபனங்கள் உட்பட)* ஏற்பாடு செய்தார்கள். மேலும் பெயர் சபையில் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த *(பதான் அராமில் சம்பாதித்த)* உதவியாளர்கள் ஆதரவாளர்கள் *(மிருகஜீவன்களாகிய மந்தைகள்)* மற்றும் உடைமைகள் எல்லாவற்றையும் *(தன் பொருள்கள் எல்லாவற்றையும்)* தங்களுடன் கொண்டு போனார்கள். மேலும் அறுவடை காலத்தின் சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லையில் *(கானான் தேசத்தில்)* நம்முடைய கர்த்தரின் மூலம் கிரியை செய்கிற தேவனுடைய அன்பென்ற இயல்பில் தேவனோடு *(ஈசாக்கினிடத்திற்கு)* இன்னும் நெருக்கமாக ஐக்கியங் கொள்ள புறப்பட்டார்கள் *(போக புறப்பட்டான்).*

*15. ஆதி. 31:19-21 லாபான், தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கப் போயிருந்தான்; அந்தச் சமயத்திலே ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக் கொண்டாள். யாக்கோபு தான் ஓடிப்போகிறதைச் சீரியனாகிய லாபானுக்கு அறிவியாமல், திருட்டளவாய்ப் போய்விட்டான். இப்படியே அவன் தனக்கு உண்டானவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு, ஆற்றைக் கடந்து, கீலேயாத் மலையை நோக்கி ஓடிப்போனான் .* இந்த காலத்தில் பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் *(லாபான்)* அவர்களுடைய ஆதரவாளர்களிடமிருந்து ஆதாயத்தை வலிந்து பெற்றுக் கொள்வதில் விசேஷமாக ஆர்வங் கொண்டு சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் *(தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கப் போயிருந்தான்; எசே. 34: 2, 3; மீகா. 3: 2, 3; 1 சாமு. 2: 12-17-ம் வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்; E Vol. 13, pp. 27-29)*. அந்தக் காலத்தில் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களில் சிலர் *(ராகேல்)* கிறிஸ்தவ மண்டலத்தின் சில மதப்பிரிவு தப்பறைகளை *(மதப்பிரிவுகளின் விக்கிரகங்கள் - சுரூபங்கள்)* ரகசியமாகத் தங்களுக்குரியதாக ஆக்கிக் கொண்டார்கள் *(சுரூபங்களைத் திருடிக் கொண்டாள்)*. கிறிஸ்தவ மண்டலத்தின் தலைவர்கள் இந்த மதப்பிரிவு தப்பறைகளின்படி ஆலோசனை செய்து அவைகளை தொழுது கொண்டிருந்தார்கள் *[தன் தகப்பனுடைய சுரூபங்கள் (teraphim -தேராபீம் - குடும்பத்திற்குரிய சுரூபங்கள்)]*. பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் *(லாபான்)*அவர்களுடைய ஆதரவாளர்களிடமிருந்து ஆதாயத்தை வலிந்து பெற்றுக் கொள்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் பெயர் சபையையும் அதின் ஊழியத்தையும் விட்டு சென்றார்கள் *(யாக்கோபு… போய் விட்டான்)*. அவர்கள் அவ்வாறு விட்டு வருவதின் ஆரம்ப நிலைகளில், அவர்கள் அவ்வாறு செல்வதைக் குறித்தும், வெளி.*18:4*-ம் வசனத்தில் தேவன் கொடுத்த கட்டளையின்படி செல்கிறார்கள் என்பதையும் இந்த தலைவர்களுக்குத் தெரிவிக்காதிருந்தார்கள் *(தான் ஓடிப் போகிறதை லாபானுக்கு அறிவியாமல்; 1 சாமு. 19: 11-18 வரையுள்ள வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்; E Vol. 9, pp. 584, 585)*. அவர்கள் அவர்களுடைய உடைமைகளெல்லாவற்றையும் தங்களுடனே கொண்டு போனார்கள் *(தனக்கு உண்டானவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு)*. பெயர் சபையில் ஸ்தாபனங்களாக அமைக்கப்பட்டிருந்த சீர்கேடான ஜனங்களைக் கடந்து போனார்கள் *[ஆற்றை (ஐப்பிராத்து நதி) கடந்து]*. மேலும் ஆணையினால் கட்டப்பட்ட

உடன்படிக்கையோடு (கீலேயாத்) தொடர்புடைய சத்தியம் மற்றும் நீதியின் உறுதியான நிலையைச் (மலை) சென்ற டையத் தீர்மானத்துடன் முன்னேறினார்கள் [கீலே யாத் (சாட்சியின் குவியல் அல்லது சாட்சியின் பாறை) மலையை நோக்கி ஓடிப் போனான்].

*16. ஆதி. 31:22-24* யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம் நாளிலே லாபானுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவன், தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு, ஏழுநாள் பிரயாணபரியந்தம் அவனைத் தொடர்ந்து போய், கீலேயாத் மலையிலே அவனைக் கண்டுபிடித்தான். அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார். காலப்போக்கில் பெயர் சபையின் முக்கியமான தலைவர்களுக்கு, நிஜ நிறைவேறுதலான யாக்கோபு பெயர் சபையை விட்டுப் போனது தெரிவிக்கப்பட்டது (லாபானுக்கு அறிவிக்கப்பட்டது). அவர்கள் அவர்களுடைய விசேஷித்த ஊழியக்காரர்களைக் கொண்டு (தன் சகோதரரைக் கூட்டிக் கொண்டு), தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களைப் பிடித்துக் கொண்டு அவர்களைத் தங்களுடைய ஊழியத்திற்குத் திரும்பக் கொண்டு வர நோக்கமாயிருந்தார்கள் (அவனைத் தொடர்ந்து போய்). இன்னும் விசேஷமாக இந்த ஊழியக்காரர்களின் உதவியாளர்களையும், ஆதரவாளர்களையும், உடைமைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ள நோக்கமாயிருந்தார்கள். அதற்காக அவர்களை ஒரு முழுமையான காலப்பகுதி வரை துன்புறுத்தினார்கள் (ஏழு நாள் பிரயாண பரியந்தம்…. தொடர்ந்து போய்). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும், அவர்களோடிருந்தவர்களும் உடன்படிக்கை சம்பந்தமாக உறுதியான நிலையை அடையும் வரை தொடர்ந்தார்கள் (கீலேயாத் மலையிலே அவனைக் கண்டு பிடித்தான்). இருந்தாலும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களிடம் அவர்கள் பேசும் வார்த்தைகளும், அவர்களுடைய நடத்தையும் நன்மையிலிருந்து தீமையாக மாறக்கூடாது என்று அவருடைய வார்த்தை மற்றும் அதின் ஆவியின் மூலம் அவர்களை எச்சரித்தார் (நன்மையே அன்றி தீமை ஒன்றும் பேசாத படிக்கு எச்சரிக்கையாயிரு).

## லாபான் மற்றும் யாக்கோபுக்கிடையில் நடந்த வாதவிவாதம்

*17. ஆதி. 31:25-27* லாபான் யாக்கோபினிடத்தில் வந்தான்; யாக்கோபு மலையிலே தன் கூடாரத்தைப் போட்டிருந்தான்; லாபானும் தன் சகோதரரோடேகூடக் கீலேயாத் மலையிலே கூடாரம் போட்டான். அப்பொழுது லாபான் யாக்கோபை நோக்கி: நீ திருட்டளவாய்ப் புறப்பட்டு, என் குமாரத்திகளை யுத்தத்தில் பிடித்த சிறைகளைப்போலக் கொண்டுவந்தது என்ன செய்கை? நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிருந்து வந்துவிட்டது என்ன? நான் உன்னைச் சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னர முழக்கத்துடனே அனுப்புவேனே. தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும் (யாக்கோபு - பாஸ்டர் ரஸல் முதலியவர்கள்) பெயர் சபையின் முக்கியமான தலைவர்களும் (லாபான்) இந்த செயல் எல்லையிலுள்ள உறுதியான கோட்பாடு ரீதியான நிலைகளென்று அவரவர்கள் கருதின கண்ணோட்டங்களை எடுத்துக் கொண்ட பிறகு (மலையிலே கூடாரம் போடுவது), அவர்களுக்கிடையில் ஒரு வாக்குவாதம் உண்டாயிற்று. தேவனுடைய இந்த விசேஷித்த ஊழியக்காரர்களின் இந்த செயல்பாட்டின் இயல்பு என்னவென்று பெயர் சபையின் தலைவர்கள் அவர்களுடைய மனநிலை, வார்த்தை செயலின் மூலம் கேட்டார்கள் (என்ன செய்கை). அவர்கள் பெயர் சபையின் தலைவர்களுக்குத் தங்களுடைய நோக்கங்களை முழுமையாகத் தெரிவிக்காமல், பெயர் சபையையும் அதின் ஊழியத்தையும் ரகசியமாக விட்டு செல்வதற்குக் காரணமென்ன (நீ திருட்டளவாய்ப் புறப்பட்டு)? பெயர் சபையின் தலைவர்கள் அவர்களை மகிழ்ச்சியுடனும் (சந்தோஷமாய்), உறுதியான கோட்பாடு மற்றும் புத்தி மதிகளென்று அவர்கள் எண்ணின கருத்துக்களின் தகுந்த அறிக்கைகளுடனும் (சங்கீதம்), வேத வசனங்களைப் பற்றிய சரியான எழுத்துகள் மற்றும் விளக்கங்களுடனும் (மேள தாளம் கின்னர முழக்கத்துடன்) அவர்களை அனுப்பி வைக்க இடங் கொடாமல் (அனுப்புவேனே) சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (என் குமாரத்திகளை) வாதவிவாதத்தில் பிடிக்கப்பட்ட சிறைகளைப் போல் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தோன்றும் விதத்தில் (யுத்தத்தில் பிடித்த சிறைகளைப் போல்) கொண்டு போவதற்குக் காரணமென்ன?

*18. ஆதி. 31:28,29* என் பிள்ளைகளையும் என் குமாரத்திகளையும் நான் முத்தஞ்செய்ய விடாமல் போனதென்ன? இந்தச் செய்கையை நீ மதியில்லாமல் செய்தாய். உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய எனக்கு வல்லமை உண்டு; ஆகிலும், உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார். மேலும் அந்த சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களுக்கும் (என் குமாரத்திகளையும்) அவர்களோடு ஒத்துணர்வு கொள்பவர்களுக்கும் (என் பிள்ளைகளையும்) பெயர் சபையின் தலைவர்கள் (லாபான்)தங்களுடைய அன்பை விசேஷ மாக வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்குக் கொடுக்காமலே அவர்கள் பெயர் சபையை ஏன் விட்டுப் போனார்கள் (நான் முத்தஞ் செய்ய விடாமல் போனதென்ன) என்றும் அவர்களிடம் கேட்டார்கள். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் புத்தியில்லாத ஒரு போக்கைப் பின்பற்றுகிறார்களென்று பெயர் சபையின் தலைவர்கள் மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் குற்றஞ் சாட்டினார்கள் (இந்த செய்கையை நீ மதியில்லாமல் செய்தாய்). மேலும் இந்த ஊழியக்காரர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய அதிகாரம் தங்களிடமிருப்பதையும் அவர்களுக்கு நினைவுப்படுத்தினார்கள் (உங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய எனக்கு வல்லமை உண்டு). சமீப காலத்தில் அவர்களுடைய கவனத்திற்கு விசேஷமாகக் கொண்டு வரப்பட்டிருந்த தேவ வார்த்தை மற்றும் அதன் ஆவியின் எச்சரிக்கைகளினால் அவர்கள் அவ்வாறு செய்யாதபடி தடுக்கப்பட்டிருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள் (நீ…. எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்).

*19. ஆதி. 31:30* இப்பொழுதும் உன் தகப்பனுடைய வீட்டின்மேலுள்ள வாஞ்சையினால் நீ புறப்பட்டுப்போகிறதானால் போகலாம், என் தெய்வங்களை ஏன் திருடிக்கொண்டு போகிறாய் என்று கேட்டான். யூத யுக அறுவடை காலத்தில் தேவ ஜனங்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்த சத்தியம் மற்றும் அதின் ஆவியின்

செயல் எல்லையின் மீதுள்ள ஆர்வமான அன்பினாலும் விருப்பத்தினாலும் (உன் தகப்பனுடைய வீட்டின் மேலுள்ள வாஞ்சையினால்) தேவனுடைய இந்த விசேஷித்த ஊழியக்காரர்கள் பெயர் சபையை விட்டு செல்ல விரும்பி இருந்தாலும் (நீ புறப்பட்டுப் போகிறதானால்) பெயர் சபையின் இந்த தலைவர்கள் பயபக்தியோடு தொழுது கொண்ட மதப்பிரிவு போதனைகளைத் தங்களோடு ஏன் கொண்டு போனார்கள்? (என் தெய்வங்களை ஏன் திருடிக் கொண்டு போகிறாய்).

*20. ஆதி. 31:31,32* யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்தரமாக: உம்முடைய குமாரத்திகளைப் பலாத்காரமாய்ப் பிடித்து வைத்துக்கொள்வீர் என்று நான் அஞ்சினதினாலே இப்படி வந்துவிட்டேன். ஆனாலும் யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விடவேண்டாம்; உம்முடைய பொருள்கள் ஏதாவது என் வசத்தில் உண்டானால் நீர் அதை நம்முடைய சகோதரருக்கு முன்பாகப் பரிசோதித்தறிந்து, அதை எடுத்துக்கொள்ளும் என்றான். ராகேல் அவைகளைத் திருடிக் கொண்டு வந்ததை யாக்கோபு அறியாதிருந்தான். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு - பாஸ்டர் ரஸல் முதலியவர்கள்) அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் இவ்வாறு பதிலளித்தார்கள் (யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்தரமாக): ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களுடனும், உக்கிராண சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களுடனும் (உம்முடைய குமாரத்திகளை) அவர்களோடு ஒத்துணர்வு கொள்பவர்களையும் பெயர் சபையின் தலைவர்கள் எவ்வாறு நடத்தக் கூடும் என்பதைக் குறித்தும், அவர்களை வற்புறுத்தி தங்களுடைய செயல் எல்லையிலே கட்டுப்படுத்தி வைத்திருக்கக் கூடுமென்றும் (பலாத்காரமாய் பிடித்து வைத்துக் கொள்வீர்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பயந்ததினால் (அஞ்சினதினாலே) கிட்டத்தட்ட ரகசியமாகப் பெயர் சபையை விட்டு சென்றார்கள் (இப்படி வந்து விட்டேன்). ஆனால் பெயர் சபையின் தலைவர்களின் மதப்பிரிவுகளின் எந்த தப்பறைகளையும் (தெய்வங்களை) தாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்று உறுதியாகக் கூறினார்கள். ஏனென்றால் அவைகள் அவர்களுக்கு முற்றிலும் பயனற்றவைகளாக இருந்தன (சங். 115: 4-8). ஆகையால் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களோடு வந்தவர்களில் யாரேனும் ஒருவன் மதப்பிரிவு தப்பறைகளைப் பற்றிக் கொள்கிறவனாக இருப்பதை இந்த பெயர் சபையின் தலைவர்கள் கண்டுபிடித்தால் (யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ), அப்படிப்பட்ட ஒருவன் சத்திய ஜனங்களின் மத்தியில் தேவ தயவிலிருந்து வெளியேற்றப்படுவதற்குத் தகுந்தவன் என்று (அவனை உயிரோடே விட வேண்டாம்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் அறிவித்தார்கள். மேலும் இரு தரப்பாரின் ஆதரவாளர்களுக்கு முன்பாகச் சத்திய ஜனங்களின் போதனைகளையும் ஏற்பாடுகளையும் பெயர் சபையின் தலைவர்கள் வெளிப்படையாக ஆராய்வதற்குத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் ஒத்துக் கொண்டார்கள் (உம்முடைய பொருள்கள் ஏதாவது என் வசத்தில் உண்டானால் நீர் அதை நம்முடைய சகோதரருக்கு முன்பாகப் பரிசோதித்தறிந்து). அவர்களிடம் பெயர் சபையின் மதப்பிரிவு போதனைகள் காணப்பட்டாலும், பாபிலோனிய இயல்புடைய ஏதேனும் ஒன்று அவர்களிடம் காணப்பட்டாலும், அது உடனடியாக அந்த தலைவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் (அதை எடுத்துக் கொள்ளும் என்றான்). ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களில் சிலர் மதப்பிரிவு தப்பறைகளை அதிகமாகவோ, குறைவாகவோ தங்களோடு ரகசியமாகக் கொண்டு வந்ததைத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அறியாதிருந்தார்கள் (ராகேல் அவைகளைத் திருடிக் கொண்டு வந்ததை யாக்கோபு அறியாதிருந்தான்).

## லாபான் தன்னுடைய சுரூபங்களைத் தேடுவது

*21. ஆதி. 31:33,34* அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்திலும், லேயாளின் கூடாரத்திலும், இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் பிரவேசித்துப் பார்த்தும் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை; பின்பு, லேயாளின் கூடாரத்தைவிட்டு ராகேலின் கூடாரத்துக்குப் போனான். ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சேணத்தின்கீழ் வைத்து, அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள்(லாபான்) முதலில் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் (யாக்கோபு - பாஸ்டர் ரஸல் முதலியவர்கள்) போதனைகளையும் ஏற்பாடுகளையும் முதலில் ஆராய்ந்தார்கள் (யாக்கோபின் கூடாரத்திலும்). மேலும் இந்த ஊழியக்காரர்களோடு இணக்கமாயிருந்த உக்கிராணத்துவ சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களின் போதனைகளையும் ஏற்பாடுகளையும் ஆராய்ந்தார்கள் (லேயாளின் கூடாரத்திலும், இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் பிரவேசித்துப் பார்த்து). ஆனால் அவர்களில் தங்களுடைய மதப்பிரிவு தப்பறைகளைக் கண்டு கொள்ளவில்லை (ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை). இறுதியாக அவர்கள் பரூஷியா காலத்தின் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களிடம் வந்தார்கள் (ராக்கேலின் கூடாரம்). இந்த ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களில் சிலர், பெயர் சபையையும் அதின் ஊழியத்தையும் விட்டு வந்த போது, அவர்கள் ரகசியமாகப் பற்றிக் கொண்டிருந்த மதப்பிரிவு தப்பறைகளை (ராகேல் அந்த சுரூபங்களை எடுத்து) அவர்களுடைய போதனைகள் மற்றும் கோட்பாடுகளுக்குள் ரகசியமாகவும் கவனமாகவும் வைத்து (ஒட்டகச் சேணத்தின் கீழ் வைத்து), அவைகளை முழுமையாக அடக்கி ரகசியமாக வைத்திருந்தார்கள் (அதின் மேல் உட்காதிருந்தாள்). ஆகையால் பெயர் சபையின் முக்கிய தலைவர்கள் ஆராயும்போது அவர்களிடம் அவைகள் இருப்பதைக் கண்டு கொள்ளவில்லை (அவன் அந்தச் சுரூபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை).

*22. ஆதி. 31:35* அவள் தன் தகப்பனை நோக்கி: என் ஆண்டவனாகிய உமக்கு முன்பாக நான் எழுந்திராததைக்குறித்துக் கோபங்கொள்ளவேண்டாம்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது என்றாள்; அப்படியே அவன் அந்தச் சுரூபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை. ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகித்தவர்களில் (ராகேல்) இவ்வாறு செயல்பட்டவர்கள், பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் (லாபான்) அவர்களை ஆராய்ந்து கேட்ட பதில்களுக்கு முழுமையாகப்

பதில் சொல்லாததினால் அவர்களுக்குக் கோபமுண்டாக்க விரும்பவில்லை என்று மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் தெரிவித்தார்கள் (நான் எழுந்திராததைக் குறித்துக் கோபங் கொள்ள வேண்டாம்). அவர்கள் இன்னும் தப்பறைகளிலிருந்து சுத்திகரிக்கப்படும் செயல்முறையின் கீழ் இருப்பதினாலும் (ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது), பெயர் சபையின் தலைவர்களின் கேள்விகளுக்கு முழுமையாகப் பதில் சொல்வதற்கு முன் சில கருத்துகளை தாங்களே ஆராய்ந்து படிப்பதற்கு மேலும் நேரம் தேவையாயிருப்பதினாலும், அந்த சூழ்நிலைகளின் கீழ் அவர்களுக்கு முழுமையாகப் பதில் சொல்லக் கூடாதவர்களாக இருந்தார்கள். ஆகையால் பெயர் சபையின் இந்த தலைவர்கள் தீர்மானமாக ஆராய்ந்தும், ரகசியமாகப் பற்றிக் கொள்ளப்பட்டு, அடக்கி வைக்கப்பட்டிருந்த மதப்பிரிவு தப்பறைகளைக் கண்டு பிடிக்காதிருந்தார்கள் (அந்தச் சுரூபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை).

*23.* வேறொரு சூழ்நிலையில் காண்பிக்கப்பட்டதைப்போல் (ஆதி. 35:2; E Vol. 10, p. 605), பரூஷியா காலத்திலுள்ள சத்திய ஜனங்கள் இவ்வித விக்கிரகங்கள் எல்லாவற்றையும் தங்களிடமிருந்து அகற்ற வேண்டுமென்று தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களுக்குக் குறிப்பாகப் புத்திமதி சொல்லி இருந்தும் அவர்கள் அதைப் பின்பற்றத் தவறினார்கள் என்பது வெளிப்படையாயிருக்கிறது. பரூஷியா காலத்தின் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களிலும், உக்கிராண சத்தியங்களைப் பிரயோகிப்பவர்களிலுமுள்ள சில கிரீடத்தை இழந்த தலைவர்கள் இந்த புத்திமதியைப் பின்பற்றவில்லை என்பது வெளிப்படையாயிருக்கிறது (ஆதி. 31-ம் அதிகாரத்தில் நிஜ நிறைவேறுதலான ராகேலைக் குறித்துக் குறிப்பாகச் சொல்லப்பட்டதைப் போல் நிஜ நிறைவேறுதலான லேயாளைக் குறித்துச் சொல்லப்படவில்லை என்றாலும் அவர்களிலும் இவ்வித இயல்புடைய சிலர் இருந்தார்கள்). இவர்கள் சில மதப்பிரிவு தப்பறைகளையும், அவைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மற்ற தப்பறைகளையும் அதிகமாகவோ குறைவாகவோ தொடர்ந்து ரகசியமாகப் பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்த தப்பறைகளை இவ்வாறு ஆதரித்தார்கள் என்பது பிற்காலத்தில் பல வழிகளில், விசேஷமாகப் பரூஷியா மற்றும் எபிப்பெனி காலத்தின் கொழித்தல்களில் வெளிப்பட்டது. அந்த கொழித்தல்கள் நிகழும்போது, சிலர் சத்தியத்தையே கைவிட்டு,பாபிலோனிய மதப்பிரிவு தப்பறைகளை அதிகமாகவோ குறைவாகவோ பற்றிக் கொண்டு போதிக்கத் தொடங்கினார்கள்.

*24.* ஆதி. 31:36,37 <u>அப்பொழுது யாக்கோபுக்குக் கோபம் எழும்பி, லாபானோடே வாக்குவாதம்பண்ணி: நீர் என்னை இவ்வளவு உக்கிரமாய்த் தொடர்ந்து வரும்படிக்கு நான் செய்த தப்பிதம் என்ன? நான் செய்த துரோகம் என்ன? என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளில் என்னத்தைக் கண்டுபிடித்தீர்? அதை என்னுடைய சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்பாக இங்கே வையும்; அவர்கள் எனக்கும் உமக்கும் நடுத்தீர்க்கட்டும்.</u> பெயர் சபையின் முக்கியமான தலைவர்களின் இந்த செயல்களுக்கு விரோதமாகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் நீதியான கோபத்தை வெளிப்படுத்தி அவர்களைக் கடிந்து கொண்டார்கள் (யாக்கோபுக்குக் கோபம் எழும்பி, லாபானோடே வாக்குவாதம் பண்ணி). பெயர் சபையின் தலைவர்களுக்கு எதிராகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் செய்த குற்றமென்னவென்றும் (நான் செய்த தப்பிதம் என்ன?), அவர்கள் ஏன் தங்களை இவ்வாறு தீவிரமாக நடத்துகிறார்கள் என்றும் (இவ்வளவு உக்கிரமாய்த் தொடர்ந்து வரும்படிக்கு), தங்களுடைய உடைமைகளில் (தட்டு முட்டுகள்) இந்த தலைவர்கள் எந்த காரியங்களைக் கண்டுபிடித்தார்கள் என்றும் (என்னத்தைக் கண்டுபிடித்தீர்?), அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் பெயர் சபையின் தலைவர்களிடம் கேட்டார்கள். அவர்கள் அவ்விதமான ஏதேனுமொரு காரியத்தைக் கண்டுபிடித்தால், இருதரப்பாரின் ஆதரவாளர்களுக்கு முன்பாக அதை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென்று கோரினார்கள் (அதை என்னுடைய சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்பாக இங்கே வையும்). அப்போது எல்லோரும் அந்த காரியத்தைக் குறித்தும் சரியாக நிதானிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள் (அவர்கள் எனக்கும் உமக்கும் நடுத்தீர்க்கட்டும்).

*25.* ஆதி. 31:38,39 <u>இந்த இருபது வருஷகாலமாய் நான் உம்மிடத்தில் இருந்தேன்; உம்முடைய செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் சினையழியவில்லை; உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை. பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டு வராமல், அதற்காக நான் உத்தரவாதம்பண்ணினேன்; பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர்.</u> சுவிசேஷ யுகத்தின் இடைப்பட்ட காலப்பகுதியில் நீண்ட காலத்திற்குத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பெயர் சபையின் தலைவர்களின் நோக்கங்களுக்காக விசுவாச உண்மைத்துவத்துடன் ஊழியஞ் செய்ததை அவர்களுக்கு நினைவுப்படுத்தினார்கள் (இருபது வருஷ காலமாய் நான் உம்மிடத்தில் இருந்தேன்). அவர்களுடைய ஆதரவாளர்களை அபிவிருத்தி செய்பவர்கள் (உம்முடைய செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும்) செழிக்கும்படி தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பார்த்துக் கொண்டார்கள் (சினையழியவில்லை). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காகப் பெயர் சபையின் போதகர்களை ஒரு போதும் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை (உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை). பிசாசுகளினாலும் அவைகளுடைய தப்பறையின் மிருகத்தனமான அமைப்புகளினாலும் புரட்டப்பட்டுச் சீர்குலைக்கப்பட்ட காரியங்களுக்காகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள் (பீறுண்டதற்காக நான் உத்தரவாதம் பண்ணினேன்). மேலும்இது நீதியான கோரிக்கையாக இல்லாதிருந்தாலும், பெயர் சபையின் தலைவர்கள் அதைக் கோரினதினால், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் பொறுப்பின் கீழுள்ள காரியங்களை மற்றவர்கள் தவறாக நடத்தினாலும், அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள் (யாத். 22:10-13).

*26.* ஆதி. 31:40,41 <u>பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய்ப் பாடுபட்டேன்.இந்த இருபது வருஷகாலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும்,</u> ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர். மேலும் பெயர் சபையிலுள்ள சத்தியங்களுக்காகவும், அவைகளைப் பிரயோகிப்பவர்

களுக்காகவும் (உம்முடைய … குமாரத்திகளுக்காகவும்), அவர்கள் சம்பாதித்த ஆதரவாளர்களுக்காகவும் (உம்முடைய மந்தைக்காகவும்) சுவிசேஷ யுக இடைப்பட்ட காலம் முழுவதும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் செயல் எல்லையில் கடுமையாக உழைத்து (உம்மிடத்தில் சேவித்தேன்). பல வகையான கடுமையான சோதனைகளின் மத்தியில் (பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது), அதிக சுயவெறுப்புடனும் விழிப்புடனும் சோர்வுடனும் (நித்திரை என் கண்களுக்குத் தூரமாய் இருந்தது), விசுவாச உண்மைத்துவமாக ஊழியஞ் செய்திருந்ததை அவர்களுக்கு நினைவுப்படுத்தினார்கள் (இவ்விதமாய்ப் பாடுபட்டேன்). பெயர் சபையின் தலைவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் ஊழியத்திற்காகக் கொடுக்கும் காரியங்களைக் குறித்து முன்பு ஒப்பந்தம் பண்ணினதைப் பல நேரங்களில் பிற்காலத்தில் மாற்றினதாக இந்த ஊழியக்காரர்கள் மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் அந்த தலைவர்களைக் குற்றஞ் சாட்டினார்கள் (என் சம்பளத்தை மாற்றினீர்). அவர்கள் இதைப் பத்து மதப்பிரிவு கூட்டங்கள் சம்பந்தமாகச் செய்ததை அவர்களுக்கு நினைவுப் படுத்தினார்கள் (பத்து முறை).

*27. ஆதி. 31:42* <u>என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் சிறுமையையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து, நேற்று ராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார் என்று சொன்னான்.</u> நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ மற்றும் அவருடைய சரீர அங்கத்தினர்களால் போற்றிதுதிக்கப் பட்டவரான (ஈசாக்கின் பயபக்திக்குரியவரும்) தேவன் தம்முடைய அன்பென்ற இயல்பில் (ஆபிரகாமின் தேவன்) அவர்களுக்கு விசேஷித்த தயவைக் காண்பிக்காதிருந்தாரேயானால் (என்னோடிராமற்போனால்), சுயநலத்துடன் காரியங்களை அபகரிக்கிற இந்த தலைவர்கள் எவ்வித ஆதரவாளர்களும் இல்லாமலே தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களை அனுப்பி இருப்பார்கள். அதாவது அவர்கள் செய்த ஊழியத்திற்குத் தகுந்த பிரதிபலனை அளிக்காமலே அனுப்பி இருப்பார்கள் (என்னை வெறுமையாய் அனுப்பி விட்டிருப்பீர்). ஆனால் தேவன் அவருடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் கடுமையான சோதனைகளையும், பெயர் சபை தலைவர்களால் அவர்கள் தவறாக நடத்தப்பட்டதையும் (தேவன் என் சிறுமையை …. பார்த்து), அவர்களுடைய கிரியையையும், அன்புள்ள பிரயாசத்தையும் (என் கைப்பிரயாசத்தையும் பார்த்து; எபி. 6:10) நன்றாக அறிந்திருந்தார். ஆகையால் ஏற்ற காலத்தில் அவருடைய ஊழியக்காரர்களின் சார்பாகச் செயல்பட்டு, இந்த தலைவர்களுக்குத் தேவையாயிருந்த கடிந்து கொள்ளுதலை அவர்களுக்குத் தம்முடைய வார்த்தை மற்றும் ஆவியின் மூலம் கொடுத்தார் (உம்மைக் கடிந்து கொண்டார்). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்குரியதை இந்த தலைவர்கள் சுயநலமாகத் தங்களுடைய செயல் எல்லையிலே வைத்துக் கொள்ள நாடினதைத் தடுத்து, தேவனுடைய ஊழியக்காரர்களுக்குரியதை அவர்கள் பெற்றுக் கொள்ளும்படி தேவன் செய்தார்.

## யாக்கோபுக்கும் லாபானுக்கும் இடையில் செய்யப்பட்ட உடன்படிக்கை

*28.* பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் பாஸ்டர் ரஸலிடம் வெளிப்படுத்தின இந்த சுயநலமான மனநிலையானது, யாக்கோபிடம் லாபான் வெளிப்படுத்தின மனநிலையின் மூலம் மட்டுமல்ல, தாவீதிடம் சவுல் வெளிப்படுத்தின பொதுவான மனநிலையின் மூலமும் நடத்தையின் மூலமும், ஆபிரகாமிடம் சோதோமின் ராஜா வெளிப்படுத்தின மனநிலையின் மூலமும் (ஆதி. 14:21) சித்தரிக்கப்படுகிறது. தங்களால் தக்க வைத்துக் கொள்ளப்படக் கூடிய ஆதரவாளர்கள் எல்லாரையும் தக்கவைத்துக் கொள்வதே இவர்கள் எல்லோரின் பிரதான நோக்கமாக இருந்தது.

*29. ஆதி. 31:43,44* <u>அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தரமாக: இந்தக் குமாரத்திகள் என் குமாரத்திகள், இந்தப் பிள்ளைகள் என் பிள்ளைகள், இந்த மந்தை என் மந்தை; நீ காண்கிற யாவும் என்னுடையவைகள்; என் குமாரத்திகளாகிய இவர்களையும், இவர்கள் பெற்ற பிள்ளைகளையும் இன்று நான் என்ன செய்யக்கூடும்? இப்பொழுதும் எனக்கும் உனக்கும் சாட்சியாயிருக்கும்பொருட்டு, நீயும் நானும் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளக்கடவோம் என்றான்.</u> இவ்வாறாக இந்த காரியங்களெல்லாம் சொல்லப்பட்டும் செய்யப்பட்டும் இருந்தாலும், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களோடிருந்த சத்தியத்தைப் பிரயோகிப்பவர்களும் (குமாரத்திகள்), அவர்களோடு ஒத்துணர்வு கொள்பவர்களும் (பிள்ளைகள்), அவர்களுடைய ஆதரவாளர்களும் (மந்தை), அவர்களுடைய மற்ற உடைமைகளும் (நீ காண்கிற யாவும்), பெயர் சபையின் முக்கியமான தலைவர்களுக்குரியவைகள் (லாபான்) என்று அவர்கள் அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் தொடர்ந்து உரிமை பாராட்டினார்கள் (என் குமாரத்திகள் … என் பிள்ளைகள்… என் மந்தை…என்னுடையவைகள்). சில சூழ்நிலைகளில், சத்திய ஜனங்கள், அவர்கள் முன்பிருந்த பெயர் சபைகளை விட்டு விட்டு, அவ்வாறு விட்டுவிட்டதைத் தெரிவிக்கும் கடிதங்களை அந்த சபைகளின் தலைவர்களுக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கும் அனுப்பி இருந்தும் கூட *(PT 1950, pp. 62, 63)* அவர்களுடைய பெயர்களைத் தங்களுடைய சபையின் அங்கத்தினர்களின் பட்டியலில் தொடர்ந்து வைத்திருக்க அவர்கள் வற்புறுத்தினார்கள்.

*30.* சத்தியத்தைப் பற்றிக் கொள்ளவும், பாபிலோனை விட்டு வெளியேறவும் சத்திய ஜனங்கள் தீர்மானமாக இருந்தார்கள் என்று பெயர் சபையின் தலைவர்கள் காணும்போது, உண்மையான சூழ்நிலையை அங்கீகரிக்க கட்டாயப்படுத்தப்பட்டார்கள் (நான் என்ன செய்யக்கூடும்?). மேலும் இந்த சத்திய ஜனங்களுக்குப் பெயர் சபையின் தலைவர்களோடிருந்த பந்தத்தைத் தகர்ப்பதைத் தவிர்க்க தங்களால் எதையும் செய்ய முடியவில்லை என்று அந்த தலைவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் (வெளி. 3:16; 18:4, 22, 23-ம் வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). ஆகையால் வருங் காலத்தில் பெயர் சபையின் தலைவர்களும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும் அவர் அவர்களுக்குரிய செயல் எல்லையில் இருப்பதற்குச் சாட்சியாகத் (சாட்சியாயிருக்கும் பொருட்டு) தங்களுக்கிடையில் ஒரு நேர்மையான ஒப்பந்தத்தை நிலை நாட்ட வேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள் (உடன்படிக்கை பண்ணிக் கொள்ளக்கடவோம்).

*31. ஆதி. 31:45, 46* <u>அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான். பின்னும் யாக்கோபு தன் சகோதரரைப் பார்த்து, கற்களைக் குவியலாகச் சேருங்கள் என்றான்; அவர்கள் கற்களை எடுத்துக்கொண்டுவந்து, ஒரு குவியலாக்கி, அந்தக் குவி</u>

யலின்மேல் போஜனம் பண்ணினார்கள். இவ்வாறாகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு - பாஸ்டர் ரஸல் முதலியவர்கள்) ஆணையினால் கட்டப் பட்ட உடன்படிக்கையின் கீழ், மில்லினிய யுகத்தில் பூமியின் சகல ஜாதிகளும் (உயிரோடிருப்பவர்களும் மரண நிலையிலிருப்பவர்களும்) ஆசீர்வதிக்கப்படுவதைப் பற் றிய வேத வசனங்களை, அதாவது இழந்ததைத் திரும்பக் கொடுத்தலைப் பற்றிய வேத வசனங்களைப் பற்றிக் கொண்டு (ஒரு கல்லை எடுத்து), அவைகளை நினைவு கூரப்பட வேண்டிய கோட்பாடு ரீதியான பெரிய போதனையாக நிலை நாட்டினார்கள் (தூணாக நிறுத் தினான்). மேலும் இந்த விஷயத்தைக் குறித்தும், அது சம்பந்தப்பட்டதுமான கூடுதலான வேத வசனங்களை சேகரிக்க அவர்களுடைய உதவியாளர்களை அழைத் தார்கள் (தன் சகோதரரைப் பார்த்து, கற்களைக் குவிய லாகச் சேருங்கள் என்றான்).

32. இவ்வாறாகப் பல வேத வசனங்கள் சேகரிக் கப்பட்டன (அப்.3:19,24). அவர்கள் அவைகளை இசை விணக்கமாகக் கூட்டிச் சேர்த்தார்கள். பிற்காலத்தில் இவைகள் சத்திய எழுத்துக்களின் மூலம் அறிவிக் கப்பட்டன (அவர்கள் கற்களை எடுத்துக் கொண்டு வந்து ஒரு குவியலாக்கி). வேதாகம சாட்சியின் இந்த இசை விணக்கமான சேகரிப்பின் அடிப்படையில் அவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த கோட்பாடுகளின் பல்வேறு அம்சங்களைத் தங்களுக்குரியவைகளாக ஆக்கிக் கொண்டார்கள் (அந்தக் குவியலின் மேல் போஜனம் பண்ணினார்கள்).

33. ஆதி. 31:47 லாபான் அதற்கு ஜெகர்சகதூதா என்று பேரிட்டான்; யாக்கோபு அதற்குக் கலயெத் என்று பேரிட்டான். பெயர் சபையின் முக்கியமான தலைவர் களும் (லாபான்) அதே வேத வசனங்களை உட்கொண் டார்கள். ஆனால் சத்திய ஜனங்களின் கண்ணோட்டத் திலிருந்து வேறுபட்ட கண்ணோட்டத்திலும் வேறுபட்ட புரிந்து கொள்ளுதலிலும் அவைகளை உட்கொண்டார் கள். அவர்கள் இவ்வாறு ஒன்றாகக் கூடி தேவ வார்த்தையை உட்கொள்ளும் நேரங்களில், பாஸ்டர் ரஸலும், தேவனுடைய மற்ற விசேஷித்த ஊழியக் காரர்களும் கொடுத்த வேதாகம போதனைகளை, விசேஷமாக இரட்சிக்கப்படாமல் மரித்தவர்களுக்கு மற் றொரு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்ற போதனையைப் பெயர் சபையின் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பெயர் சபையின் தலைவர்கள் தப்பறையான பாஷை யைப் பேசுபவர்களாக இருந்ததால், அவர்களுடைய கண்ணோட்டத்திலிருந்து இந்த வேத வசனங்கள் சத்திய கருத்தை ஆதரிக்கும் வேதாகம சாட்சியின் சேகரிப்பாக இல்லாமல், தங்களுடைய சொந்த (தப்பறையான, மதப் பிரிவு பற்றுடைய) கருத்துகளுக்கு ஆதரவான வேதாகம சாட்சியின் குவியலாக இருந்தன [லாபான் அதற்கு ஜெகர்சகதூதா - கலயெத் என்ற எபிரெய வார்த்தைக்குச் சமமான அர்த்தமுடைய கல்தேய அல்லது சீரிய மொழி யின் வார்த்தை - இரண்டு வார்த்தைகளும் சாட்சியின் குவியல் என்பதை அர்த்தப்படுத்தும்) என்று பேரிட்டான்]. ஆனால் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) எபிரெய பாஷை அடையாளப்படுத்துகிற சத்தியத்தைப் பேசுபவர்களாக இருப்பதால் (வெளி. 9: 11; 16: 16; நெகே. 13: 24; E Vol. 10, p. 205), அவர்களுடைய கண்ணோட்டத்திலிருந்து இந்த வேத வசனங்கள் சத்திய கருத்துக்கு மிகுதியாக ஆதரவளிக்கிற வேதாகம சாட்சி யின் சேகரிப்பாக இருந்தன (கலயெத் என்று பேரிட் டான்). இவ்வாறாக எதிர்மாறாக இருந்த இந்த இரு தரப்பார்களுக்கும் அவர்களுடைய கருத்துகளுக்கும் இடையில் உடன்பாட்டுக்கு வர முடியாத சிக்கல் ஏற்பட்டது.

34. ஆதி. 31:48-50 இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் சாட்சி என்று லாபான் சொன்ன படியினாலே, அதின் பேர் கலயெத் என்னப் பட்டது. அல்லாமலும் அவன்: நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், நீ என் குமாரத்திகளைத் துயரப் படுத்தி, அவர்களையல்லாமல் வேறே ஸ்திரீகளை விவாகம்பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர்; நம்முடனே ஒருவரும் இல்லை; பார், தேவனே எனக்கும் உனக்கும் சாட்சி என்று சொன்னபடியால், அது மிஸ்பா என்னும் பேர் பெற்றது. இவ்வாறாக வேத வசனங்களின் இந்த சேகரிப்பானது (இந்தக் குவியல்) , பெயர் சபையின் முக்கியமான தலைவர்களுக்கும் (லாபான்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கும் (யாக்கோபு) இடை யில் ஒரு சாட்சியாக நிற்கும் என்று அந்த தலைவர்கள் உறுதியாகக் கூறினார்கள் (எனக்கும் உனக்கும் சாட்சி என்று லாபான் சொன்னபடியால்). ஆகையால் அவர்கள் அந்த செயல் எல்லையை விசேஷித்த கவனத்திற்கும் விழித்திருத்தலுக்கும் உரிய ஒன்றாகக் கருதினார்கள் [மிஸ்பா (விழித்திருத்தல், விழித்திருத்தலின் இடம் அல்லது காவல் கோபுரம்)]. பெயர் சபையின் இந்த தலைவர்கள், இந்த வேத வசனங்களைப் பற்றிய தங்க ளுடைய புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில், அவர் களும் அவர்களுடைய போதனைகளும் "பாரம்பரியமான வழக்கங்களாக" இருந்தனவென்றும், தேவனுடைய விசே ஷித்த ஊழியக்காரர்களும் அவர்களுடைய போதனை களும் (அவர்கள் அவைகளை "இரண்டாம் சந்தர்ப்பம் அளிக்கப்படுவதை" பற்றிய போதனைகள் என்று அழைத் தார்கள்) "பாரம்பரியமான வழக்கத்திலிருந்து மாறுபட்ட வைகள்" என்றும் எண்ணினார்கள். ஆகையால் இந்த இரு தரப்பாரும், ஒருவர் மற்றொருவரிடமிருந்து பிரிந்திருக் கும் போது (நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்த பின்), ஒருவர் மற்றொருவர் சம்பந்தமாகவும் அவர்களுடைய செயல்கள் சம்பந்தமாகவும் வருங்காலத்தில் என்ன செய்வார்கள் என்று தேவன் கவனிக்க வேண்டுமென்று தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள் (கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக் கடவர்). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களிட முள்ள வேதாகம சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் தவறாகப் பயன்படுத்தினால் (என் குமாரத்திகளைத் துயரப்படுத்தி), அல்லது அந்நிய கோட்பாடுகளோடு தங்களை இணைத்துக் கொண்டால் (வேறே ஸ்திரீகளை விவாகம் பண்ணினாயானால்), சர்வ ஞானமுள்ளவரான தேவன், அவர்கள் செய்கிறதைக் கவனித்து அதற்கேற்றவாறு அவர்களை நியாயந்தீர்ப் பாரென்று தேவனுடைய ஊழியக்காரர்களைப் பெயரள விலான ஜனங்களின் தலைவர்கள் எச்சரித்தார்கள்.

35. ஆதி. 31:51,52 பின்னும் லாபான் யாக்கோபை நோக்கி: இதோ, இந்தக் குவியலையும் எனக்கும் உனக் கும் நடுவாக நான் நிறுத்தின தூணையும் பார். தீங்கு செய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி. இழந்ததைத் திரும்பக் கொடுத்தலைப் பற்றிய வேத வசனங்களின் இந்த சேகரிப்பு (இந்த குவியல்) தேவ னுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கும்(யாக்கோபு)

பெயர் சபையின் முக்கியமான தலைவர்களுக்கும் (லாபான்) நடுவாக நிற்கிறது என்று அந்த தலைவர்கள் அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் திரும்ப உறுதி செய்தார்கள் (எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்தின தூண்). இந்த வேத வசனங்கள் சம்பந்தமாக இருதரப்பாரும் ஒருமைப்பாடு கொள்ள முடியாததால், அது அவர்கள் நடுவில் ஒரு தடையாக இருக்கும் என்றும் இருதரப்பாரும் அதைக் கடந்து செல்ல மாட்டார்கள் என்றும் சொன்னார்கள். இவ்வாறாக ஒருவர் மற்றொருவருடைய செயல் எல்லைக்குள் நுழைந்து ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கிழைக்கா மலிருப்பார்கள் (தீங்கு செய்ய நான் … உன்னிடத்துக்கு வராத படிக்கு, நீ …. என்னிடத்துக்கு வராத படிக்கும்).

*36. ஆதி. 31:53* <u>ஆபிரகாமின் தேவனும் நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமா யிருக்கிறவர் நமக்குள்ளே நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் பயபக்திக்குரியவர்மேல் ஆணையிட்டான்.</u> பெயர் சபையின் இந்த தலைவர்களுக்கும் (லாபான்)தேவ னுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கும் (யாக்கோபு) இடையில் நியாயந்தீர்க்கும் படிக்கு இந்த தலைவர்கள் யாவே தேவனை மட்டுமே அழைப்பதற்குப் பதிலாக பல தேவர்களை அழைத்தார்கள். அவர்கள் *(a)* யாவே தேவ னுடைய அன்பென்ற இயல்பில் அவரையும் (ஆபிரகாமின் தேவன்), *(b)* பெயர் சபையிலுள்ள சண்டை செய்யும் மனப்பாங்குடைய கிரீடத்தை இழந்தவர்கள் [நாகோர் (ஒரு காரியத்தை விரும்பாததை வெளிப்படுத்தும் முறை யில் சீறொலி எழுப்பு - இது அவர்களுடைய சண்டை செய்யும் இயல்பைக் காட்டுகிறது)] மற்றும் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்கள் [அவர்கள் பிதாக்கள் (தேராகு, பிரயாணம் செய்பவன்; யோசு.24:2)] ஆகிய வர்களின் மதப்பிரிவு கோட்பாடுகளின் சினங் கொள்கிற மற்றும் பழி வாங்குகிற தேவர்களையும் (நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனும்) அழைத் தார்கள். ஆனால் தேவனுடைய விசேஷித்த ஊழியக் காரர்களோ, தங்களுக்கிடையில் நியாயந்தீர்ப்பதற்காக ஒன்றான மெய் தேவனை மட்டுமே அழைத்தார்கள். அதாவது நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவும் அவரு டைய சரீர அங்கத்தினர்கள் எல்லாரும் போற்றிதுதிக்கிற யாவே தேவனை அவருடைய அன்பென்ற இயல்பில் அழைத்தார்கள். (தன் தகப்பனாகிய ஈசாக்கின் மேல் பயபக்திக்குரியவரின் மேல் ஆணையிட்டான்).

*37. ஆதி. 31:54* <u>பின்பு, யாக்கோபு மலையின்மேல் பலியிட்டு, போஜனம்பண்ணும்படி தன் சகோதரரை அழைத்தான்; அப்படியே அவர்கள் போஜனம்பண்ணி மலையிலே இராத்தங்கினார்கள்.</u> அதற்குப் பிறகு தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு - பாஸ்டர் ரஸல் முதலியவர்கள்) ஆணையினால் கட்டப் பட்ட உடன்படிக்கை சம்பந்தப்பட்ட சத்தியம் மற்றும் நீதியில் அவர்களுக்கிருந்த உறுதியான நிலையின் அடிப்படையில் (மலையின் மேல்) மிகுதியான பலியின் ஊழியங்களுக்காக ஏற்பாடு செய்தார்கள் (பலியிட்டு). மேலும் பொதுவாக விசுவாசிகளெல்லாரும் (தன் சகோதரர்கள்) சத்தியத்தின் விருந்தில் சேர்ந்துகொள்ள அவர்களை அழைத்தார்கள் (போஜனம் பண்ணும்படி… அழைத்தான்). அநேகர் அவ்வாறு பங்கு கொண்டார்கள். காலப்போக்கில் பல இலட்சக்கணக்கான சத்திய வால்யூம் களும், பத்திரிக்கைகளும், சிறுபுத்தகங்களும், கைப்பிரதி களும், பிரசங்கங்களும் வெளியிடப்பட்டிருந்தன. சிலர் சத்தியத்தின் மேல் அதிக பசிதாகமுள்ளவர்களாகத் திருப்தியாய் சாப்பிட்டார்கள். சத்தியத்தின் மேல் குறைந்த பசிதாகமுள்ளவர்களாகிய பெயர் சபையின் முக்கியமான தலைவர்கள் மிகக் குறைவாகச் சாப்பிட்டார்கள் அல்லது சாப்பிடாமலே இருந்தார்கள் (போஜனம் பண்ணி). இந்த விசேஷித்த சோதனை காலம் முழுவதும் அவர்கள் இந்த செயல் எல்லையிலே தங்கி இருந்தார்கள் (இராத்தங் கினார்கள்).

*38. ஆதி. 31:55* <u>லாபான் அதிகாலமே எழுந் திருந்து, தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் முத்தஞ்செய்து, அவர்களை ஆசீர்வதித்தான். பின்பு லாபான் புறப்பட்டு, தன் இடத்துக்குத் திரும்பிப் போனான்.</u> அதற்குப் பிறகு பெயர் சபையின் இந்த தலை வர்கள் (லாபான்) இறுதியாகக் கிட்டத்தட்ட நல் லெண்ணத்தின் மனநிலையோடே பாஸ்டர் ரஸலையும் மீதியான சத்திய ஜனங்களையும் விட்டுவிட்டு (லாபான் புறப்பட்டு) பெயர் சபையில் அவர்களுடைய செயல் எல்லைக்குத் திரும்பினார்கள் (தன் இடத்திற்குத்திரும்பி போனான்). அவ்வாறு பிரிந்து செல்லும்போது, இந்த விசேஷித்த ஊழியக்காரர்களோடிருந்து சத்தியத்தைப் பிரயோகித்துக் கொண்டிருந்த இரு வகுப்பாரின் அங்கத் தினர்களிடமும் (தன் குமாரத்திகளையும்), அவர்களோடு ஒத்துணர்வு கொள்கிறவர்களிடமும் (தன் குமாரர்) விசேஷித்த அன்பை வெளிப்படுத்தி (முத்தஞ் செய்து), தேவன் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் (அவர்களை ஆசீர்வதித்தான்). பாஸ்டர் ரஸலுக்கும் பெயர் சபையின் முக்கியமான தலைவர்களுக்கும் இடையில் நடந்த இந்த படிப்படியான பிரிவும், அவர்களுடைய இறுதியான முடிவும், தாவீது மற்றும் சவுலுக்கிடையில் நடந்த படிப்படியான பிரிவிலும் சவுலுடைய இறுதியான முடிவிலும் கூட சித்தரிக்கப்பட்டிருக்கின்றன *(E Vol. 9, Chap. X; E Vol. 14, Chaps. I and II)*


★★★★★★★★★★★★★★★★★★★★★

# தேவனுடைய கிரியைகள் மற்றும் வார்த்தை

***BS# 341, Aug 1964, pp.57-60***

*"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது"*
*(சங்.19:7)*

*1.* **தே**வனுடைய பரிசுத்தமான வார்த்தை யைத் தியானிப்பதும், அதைக் குறித்து சிந்திப்பதும் மிகவும் நன்மையான ஒன்றாகும். ஏனென்றால் அவ்வாறு செய்வதின் மூலம் மட்டுமே, நாம் அதிலிருந்து போஷாக்கைப் பெற்றுக்கொள்ளக் கூடும். அவ்வாறு போஷாக்கைப் பெற்றுக்கொண்டு பலமடைய வேண்டும் என்பதே வேதாகமத்தைக் கொடுப்பதில் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. வேதவசனங்களை வேகமாகப் படித்து முடித்து, உடனே மற்ற சிந்தனைகளுக்கும் வேலைகளுக்கும் கவனத்தைத் திருப்புவது என்பது ஆவிக்குரிய அஜீரணத்தை உண்டுபண்ணும். அவ்வாறு செய்கிற ஒருவன் சத்தியத்தின் ஆவியைத் தனதாக் கிக்கொள்ளும் திறனற்றவனாகவும், நன்றாக வளர்ந்து பக்குவமடைந்த கிறிஸ்தவ குணாம்சத்தின் பலமும் வல்லமையும் இல்லாதவனாகவும் இருப்பான்.



*2.* கர்த்தரிடத்தில் உண்மையாக அன்புகூர்ந்து, அவருடைய வார்த்தையிலும் திட்டத்திலும் களிகூருகிற அனைவரின் சரியான மனநிலையைச் சங்கீதக்காரர் மிக அழகாகச் சித்தரிக்கிறார்: “கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்”; “உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன்”; “நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன்”; “உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்; உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்”; “உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது”; “உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்”; “உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்”; “உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி”; “உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்; உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்” *(சங். 1:2; 77:12; 104:34; 119:15, 16, 24, 97, 104, 111; 143:5).*

*3.* மேலே குறிப்பிடப்பட்ட வசனங்களும், சங்கீதம் *19*-ம் அதிகாரமும் நமக்குப் பின்வரும் காரியத்தை சுட்டிக்காட்டுகின்றன: யாவே தேவனிடத்தில் அன்புகூர்ந்து, அவரை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் தியானிக்க வேண்டிய விசேஷித்த காரியங்கள், இயற்கையின் புத்தகம் மற்றும் தேவனுடைய வெளிப்பாட்டின் புத்தகம் என்ற இரண்டு மேன்மையான புத்தகங்களாக இருக்கின்றன.

*4.* சங். *19:1-6:* வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.

*5.* சங். *19:1-6* வரையுள்ள வசனங்கள், இயற்கையின் காரணக்கர்த்தரின் வல்லமை, திறமை, ஞானம், நற்குணம், மகிமை ஆகியவற்றைக் குறித்து இயற்கையானது எவ்வித சத்தமுமில்லாமல், உறுதியாக அளிக்கிற சாட்சியைக் குறிப்பிடுகின்றன. எந்த தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த பாஷைக்காரராக இருந்தாலும், பூமி முழுவதிலும் ஆழ்ந்து சிந்திக்கிற ஒவ்வொருவனும், இயற்கை கொடுக்கிற இந்த சாட்சியைப் பகலிலும், இரவிலும் காணக்கூடியவனாக இருக்கிறான். “வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.”

*6.* தேவனுடைய மகிமைக்கு இயற்கை கொடுக்கிற சாட்சியைத் தியானித்து, யோபு இவ்வாறு சொல்கிறார்: “அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்... அவர் துருவச்சக்கர நட்சத்திரங்களையும், மிருகசீரிஷத்தையும், அறுமீனையும், தட்சண மண்டலங்களையும் உண்டாக்கினவர்; ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்” *(யோபு 9:4, 9, 10).* யாவே தேவனும் தம்முடைய ஈடற்ற உச்ச நிலையான வல்லமையைக் குறித்தும், கிருபையைக் குறித்தும் யோபுக்கு நிச்சயத்தை அளிக்க விரும்பி, “அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச்சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ? வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ?” என்று யோபுவினிடம் கேட்கிறார் *(யோபு 38:31-33).*

*7.* வானத்தின் பிரகாசமான நட்சத்திரக் கூட்டங்கள், அவைகளுடைய திரளான எண்ணிக்கையின் மூலமும், பல்வேறு நட்சத்திர மண்டலங்களாக ஒழுங்கமைக்கப்படுவதன் மூலமும், அவைகள் ஒன்று மற்றொன்றுக்கு இடையூறாக இல்லாமல், இடைவிடாமல் அசைந்துகொண்டிருப்பதின் மூலமும், அவைகளுக்கிடையிலுள்ள பூரண இசைவிணக்கத்தின் மூலமும், அவைகளுடைய பிரம்மாண்டத்தின் மூலமும், ஒன்று மற்றொன்றின் மீது செலுத்துகிற ஆசீர்வாதமான தாக்கத்தின் மூலமும், இரவும் பகலும் தேவனுடைய மகிமையை அறிவிக்கின்றன. இந்த காரியங்களைக் குறித்துச் சிந்திக்கிற ஒருவன், “தேவன் இல்லை என்று ... தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிற” “மதிகெட்டவனாக” இருக்க மாட்டான். ஏனென்றால் இயற்கை முழுவதும் சிருஷ்டிகரின் மகிமைக்கும் வல்லமைக்கும் சாட்சிகூறுகிறது.

*8.* சங். *19:7-11* வரையுள்ள வசனங்கள், தேவ ஆவியின் அகத்தூண்டுதலினால் ஊக்குவிக்கப்பட்ட மனுஷ செயலியக்கிகளின் மூலம் தேவன் தம்மைப் பற்றி எழுத்துவடிவத்தில் கொடுத்த விசேஷமான வெளிப்பாட்டின் இன்னும் மேன்மையான மகிமையை நமக்குக் குறிப்பிடுகின்றன. இந்த சாட்சியானது, தேவனுடைய நற்குணத்தையும், கிருபையையும் அமைதியாக குறிப்பிட்டு, அவருடைய இருத்தலையும், வல்லமையையும், ஞானத்தையும் அறிவிப்பது மட்டுமல்ல, தேவனுடைய மகிமை

யான இயல்புகள் எல்லாவற்றைக் குறித்தும், கிறிஸ்துவின் மூலம் அவர் நமக்கு வெளிப்படுத்துகிற அன்பு மற்றும் கிருபையை குறித்தும் சிந்திக்கிற ஒவ்வொருவனுக்கும் தேவையான உறுதியான சாட்சியை மிகுதியாக அறிவிக்கிறது.

*9.* "யாவே தேவனுடைய வேதம் குறை வற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது *(converting the soul KJV* - ஆத்துமாவை மாற்று கிறதுமாயிருக்கிறது)" என்று சங்கீதக்காரர் சொல்வதை கேளுங்கள். உலகத்திலுள்ள மற்ற தாக்கங்கள் நம்முடைய நடத்தையிலும் செயல்களிலும் தற்காலிகமாக, ஓரள விற்கு மாற்றத்தை உண்டுபண்ணக் கூடும். ஆனால் நம்மில் மாற்றத்தை உண்டுபண்ணுவதற்குத் தேவன் வெளிப் படுத்தின சத்தியத்திற்கு நிகரானது வேறெதுவும் இல்லை. ஏனென்றால் தேவனுடைய சத்தியமானது, நம்முடைய ஆத்துமாவை, அதாவது நம்மையும், நம்முடைய குணாம்சத்தையும் முழுமையாக மாற்றும். நம்மை மாற்றிக்கொள்வதற்குத் தேவன் ஏற்பாடு செய்திருக்கிற இந்த ஒரே வழிமுறையை உபயோகிப்பதற்குப் பதிலாக, மற்ற செயலியக்கிகளும் தாக்கங்களும் பலமுறை உபயோகிக்கப்படுவதால், வெளிப்படையாக மட்டுமே தங்களை மாற்றிக்கொள்கிற பல பெயரளவிலான கிறிஸ்தவர்களை நாம் காண்கிறோம். அவர்களுடைய எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தங்களை முழுமையாக மாற்றிக்கொண்டு, தங்களைக் கர்த்தருக்கு முழுமையாகப் பிரதிஷ்டை செய்தவர்கள் மிகச்சிலராக மட்டுமே இருக்கிறார்கள். பொதுவான அறிவை அடை வதின் மூலம் ஜனங்கள் அநாகரீகத்திலிருந்து நாகரீகத் திற்கு மாறக்கூடும். குடிப்பழக்கத்தினால் வரும் பிரச்சனை களை அறிந்துகொள்வதின் மூலம் அந்த பழக்கத்தை விட்டுவிடக் கூடும். "நேர்மையே சிறந்த கொள்கை" *(Honesty is the best policy)* என்று கற்றுக்கொள்வதின் மூலம் நேர்மையற்ற நடத்தையை விட்டுவிட்டு நேர்மையாக நடந்துகொள்ளக்கூடும். ஆனால் இவைகளில் எந்த ஒன்றும் ஆத்துமாவை உயிர்ப்பிப்பதாக *(convert KJV*- மாற்றுவதாக) இருப்பதில்லை. தேவனுடைய சத்தியம் மட்டுமே ஆத்துமாவை மாற்றக்கூடியதாக இருக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்த மாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா.*17:17*) என்று நம்முடைய கர்த்தர் ஜெபித்தபோதும் இதனையே குறிப்பிடுகிறார்.

*10.* "யாவே தேவனுடைய சாட்சி சத்தியமும் [*sure* - நிச்சயமில்லாததாக இல்லாமல், தெளிவானதாக வும், உறுதியானதாகவும் இருக்கிறது], பேதையை [தங்களுக்கென்று ஒரு சித்தத்தையோ அல்லது திட்டத் தையோ வைத்துக்கொள்ளாமலும், தங்களுடைய திட்டத் தைத் தேவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும் பாமலும், தேவனுடைய திட்டத்தை மட்டுமே நாடுகிற ஒரே இருதயமுள்ளவர்களை] ஞானியாக்குகிறதுமாயிருக் கிறது [தங்களுடைய சொந்த திட்டங்களையும், கோட் பாடுகளையும் வைத்துக்கொண்டு, தேவனுடைய சித்தத் திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படியாத அகந்தையுள்ளவர் களாகவும், விருப்பத்துணிவுள்ளவர்களாகவும் ஆக்காமல், ஞானிகளாக ஆக்கும்].

*11.* "கர்த்தருடைய நியாயங்கள் [எபிரெய வார்த்தை "பிக்கிடீம்" - *piqquidim* – நியமனங்கள் - *appointment*] செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது மாயிருக்கிறது." ஆம், தேவன் நியமித்த யுகங்களைப் பற்றிய மகிமையான திட்டமானது, அதை அறிந்து கொள்கிற அனைவரின் இருதயங்களை நிச்சயமாக மகிழச் செய்கிறது.

*12.* "கர்த்தருடைய கற்பனை [எபிரெய வார்த்தை "மிட்ஸ்வா" - *mitzvah* - கற்பனைகள் அல்லது போதனை கள்] தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக் கிறது [நீதி மற்றும் அநீதியின் பாதைகளின் இயல்பையும், அவைகளின் முடிவையும் நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது]."

*13.* "யாவே தேவனுக்குப் பயப்படுகிற பயம் [எபிரெய வார்த்தை "யிரா" - *yirah* - போற்றித்துதிக்கும் பயபக்தி] சுத்தமும் [அடிமையின் மனப்பாங்குடன் ஒடுக்கு தலையும் அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், அன்பு மற்றும் நன்றியறிதல் என்பவைகளின் மேல் கட்டப்பட்ட பரிசுத்தமான மற்றும் உயர்வான பண்பு], என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது."

*14.* "யாவே தேவனுடைய நியாயங்கள் [எபிரெய வார்த்தை "மிஷ்பாத்" - *mishpat* - பிரமாணங்கள் அல்லது கட்டளைகள்] உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ள துமாய் இருக்கிறது." தப்பறையான போதகர்கள் மற்றும் தவறான விசுவாசப் பிரமாணங்களின் வழிநடத்துதலைப் பின்பற்றினதினால் நாம் ஒரு காலத்தில் தேவனுடைய "நித்தியமான பிரமாணங்களை" பேரச்சத்துடன் மட்டுமே கருதியிருந்தோம். ஏனென்றால் அவைகள் மனுகுலத்தில் மிகச்சிலருக்கு மட்டுமே ரட்சிப்பையும், பெரும்பான்மை யோருக்கு நித்திய வேதனையையும் கட்டளையிட்டன என்று தவறாகப் புரிந்துகொண்டோம். ஆனால் நம் முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்ட பிறகு என்னே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது! தேவனுடைய பிரமாணங்கள் இப்பொழுது நமக்கு மதுரமானவைகளாக இருக்கின்றன. நாம் அவைகளைப் பெரிதும் மதித்துணருகிறோம். அவர் ஒரு உன்னத இரட்சகரையும், ஒவ்வொரு மனுஷனுக்குக் கிடைக்கக் கூடிய மேன்மையான ரட்சிப்பையும் கட்டளையிட்டிருப் பதை நாம் காண்கிறோம். தேவன் ஏற்படுத்தின ஒரே நிபந்தனையாகிய "நீதி" என்பதின் அடிப்படையில் ஒவ்வொரு மனுஷனும் நித்திய ஜீவனை அடைவதற்கான முழுமையான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் படிக்கு, ஒவ்வொருவனும் சத்தியத்தைப் பற்றிய தெளிவான அறிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பது தேவனுடைய ஏற்பாடாக இருக்கிறது *(1* தீமோ.*2:4).*

*15.* "அன்றியும் அவைகளால் [நீதி மற்றும் அநீதியின் பாதைகள், அவைகளுடைய வெகுமதிகள் மற்றும் தண்டனைகள் ஆகியவைகள் சம்பந்தமாகத் தேவன் கொடுத்த நியாயங்கள் அல்லது கட்டளைகள்] உமது அடியேன் [இந்த காரியங்களைத் தியானித்துச் சிந்திக்கிற ஊழியக்காரன்] எச்சரிக்கப்படுகிறேன்; அவை களைக் கைக்கொள்ளுகிறதினால் [அவைகளை நினைவு கூர்ந்து, அவைகளுக்கு இசைவாக நடப்பதினால்] மிகுந்த பலன் உண்டு."

*16.* இவ்வாறாக இயற்கையின் புத்தகத்தையும், தெய்வீக வெளிப்பாட்டின் புத்தகத்தையும் சரியாகப் படிக்கும்போது, அவைகள் இரண்டும் இசைவிணக்க மாகத் தேவனுடைய மகிமையை அறிவிப்பதைக் காண்போம். இவ்விதமான மகிமையான காரியங்களைக் குறித்து இடைவிடாமல் தியானிப்பதின் மூலம், குணாம்சத்தில் மேம்படுத்தப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்படுகிற மனுஷன் பாக்கியவானாக இருப்

பான். அது ஒவ்வொரு மேன்மையான மற்றும் நன்மையான நோக்கத்தைப் புதுப்பித்து, அதைப் பலப்படுத்தி, தீமையான மற்றும் பாவமான ஒவ்வொரு போக்கையும் தடுத்து, நம்முடைய இருதயத்தைச் சுத்திகரிக்கும், நம்முடைய வைராக்கியத்தைத் தூண்டி விடும், நம்முடைய நம்பிக்கையை ஊக்குவிக்கும். ராஜ்யத்திற்குக் கொண்டுசெல்கிற பாதையில் நம்முடைய ஓட்டத்தைத் தொடங்கிவைத்து, அந்த பாதையின் மகிமையான முடிவை எப்பொழுதுமே நம்முடைய மனதிற்கு முன்பாக வைத்து, அந்த பாதையில் நம்மைக் காக்கும்!

*17.* நாம் இரவும் பகலும் வியந்து பார்க்கிற இந்த அற்புதமான பிரபஞ்சத்தின் இந்த மாஉன்னத சிருஷ்டிகர், அற்பர்களான நம்மையும் ஆபிரகாமின் வித்தாக இருக்க அழைத்திருக்கிறார். சர்வத்துக்கும் சுதந்தரவாளியாகிய அவருடைய ஒரே பேறான குமாரரின் ஊழியக்காரர்களாக பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதற்குத் தேவனால் ஒருவித கருத்தில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்க நம்மை அழைத்திருக்கிறார். நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட நமக்குத் திராணி அளிப்பதற்கு, தேவையான ஊக்குவித்தலையும், போதனையையும் இந்த மகிமையான வெளிப்பாடுகளில் தேவன் தாமே நமக்குக் கொடுக்கிறார். நாம் இந்த வெளிப்பாடுகளை நம்முடைய தியானங்களின் மையமாக ஆக்கிக்கொள்ளும்போது, இந்த ஓட்டத்தில் பொறுமையோடே ஓட திராணியடைவோம்.

*18.* சங். 19:12: "தன் பிழைகளை உணருகிறவன் [தன்னுடைய சொந்த பலத்தினாலோ, சொந்த ஞானத்தினாலோ, முன்னறிவினாலோ முழுமையாகப் புரிந்து கொண்டு, அவைகளுக்கு எதிராகத் தன்னைக் காத்துக் கொள்ளக் கூடியவன்] யார்? ஒருவனும் இல்லை! ஏனெனில் அப்போஸ்தலராகிய பவுல் கூறுவதைப் போல், நம்முடைய பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாம் மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், சரீரரீதியாகவும் பலவீனர்களாக இருப்பது மட்டுமல்ல, அதற்குக் கூடுதலாகத் தந்திரமான ஒரு சத்துருவை எதிர்த்துப் போராடுகிறோம்: மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, கண்களுக்குப் புலப்படாத துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபே. 6:12). தவறாக வழிநடத்தப்பட்ட, சீர்கேடான பொதுஜனங்களின் மனதில் கோட்பாடு மற்றும் நடத்தை சம்பந்தப்பட்ட தப்பறைகள் ஆழமாகப் பதிந்திருக்கின்றன. அதற்குக் கூடுதலாக நம்முடைய மனம் மற்றும் இருதயத்தின் ஆற்றல் குன்றிப்போயிருக்கின்றன. மேலும் நம்மைத் திறமையாக வஞ்சிக்கவும், தோல்வியுறச் செய்யவும் பெரிய எதிராளியானவன் ஓயாமல் முயன்று கொண்டிருக்கிறான். இப்படி இருக்கும்போது இந்த தப்பறைகளுக்கு எதிராகத் தன்னைக் காத்துக்கொள்ள திராணியுள்ளவன் யார்? இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்? சங்கீதக்காரர் கேட்கிற கேள்வியிலே அதற்குரிய பதில் அடங்கியுள்ளது - ஒருவனும் இல்லை! நம்முடைய சொந்த பலத்தில் நிலைநிற்க நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகையால், "மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்" (சங். 19:12,13) என்ற ஜெபம் எவ்வளவு ஏற்றதாக இருக்கிறது.

## துணிகரமான பாவங்களுக்கு விலகியிருப்பது

*19.* துணிகரமான பாவங்கள் என்பவைகள் தகாத தன்னம்பிக்கையினாலும், பேராசையினாலும், பெருமையினாலும் செய்யப்படுகிற பாவங்களாக இருக்கின்றன. அநேகர் இதை அறியாமலே இந்த குற்றத்திற்கு ஆளாகிறார்கள். தேவன் ஒருபோதும் அங்கீகரிக்காத தங்களுடைய மதப்பிரிவுகளில் அதிக எண்ணிக்கையில் நபர்கள் சேரவேண்டும் என்ற தங்களுடைய விருப்பத்தின்படி ஜெபத்தில் தேவனுக்குக் கட்டளையிட துணிவு கொள்கிறார்கள். அல்லது ஒரு குறிப்பிட்ட கூடுகையில் எத்தனை பேர்கள் மனமாற்றம் அடைவதை தாங்கள் விரும்புகிறார்கள் என்று துணிவுடன் தேவனிடம் சொல்கிறார்கள். அல்லது அயல் நாடுகளில் செய்யப்படுகிற ஊழியங்கள் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்றும், என்ன விளைவுகளைக் கொடுக்க வேண்டும் என்றும் தேவனுக்குக் கட்டளையிடுகிறார்கள்.

*20.* தேவனுடைய வார்த்தையில் சொல்லப்படாத காரியங்களைக் குறித்துத் தேவன் என்ன செய்ய தீர்மானித்திருக்கிறார் என்பதை யூகிக்க சிலர் துணிவு கொள்கிறார்கள். கர்த்தர் செய்யும்படிக்கு அவர்கள் ஆயத்தம் செய்த, அவர்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு கருத்துக்கு இடையூறாக இருந்தால், இரண்டாம் மரணம் போன்ற கோட்பாடுகளையும் அசட்டை செய்ய துணிவு கொள்கிறார்கள். இது துணிகரமான பாவமாகும். மற்றவர்களோ, துன்மார்க்கர்களைத் தேவன் வேதனையில் நித்தியத்திற்கும் வைத்திருப்பார் என்று சொல்கிறார்கள். இவ்வாறாக, எழுதப்பட்டிருப்பதைவிட அதிக ஞானமுள்ளவர்களாகச் செயல்பட நாடி தப்பறைக்குள் செல்கிறார்கள். இதுவும் துணிகரமான ஒரு பாவமாக இருக்கிறது அல்லவா?

*21.* இவ்விதமான துணிகரமான பாவங்களுக்கு இயல்பான விளைவுகள் இருக்கின்றன. இவர்களுடைய கருத்துகளுக்கு முரண்பாடான வேதாகம கருத்துகளையும் மதித்துணராதிருப்பார்கள். தங்கள் விருப்பத்தின்படி கருத்துக்களைப் புரட்டுவார்கள். வேதாகம கருத்துக்களைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும் என்பதைப் பற்றிய மதித்துணருதல் குறையும்போது, இயல்பாகவே விருப்பத்துணிவு அதிகரிக்கும். இவ்வாறாகத் தங்களுடைய தன்னம்பிக்கையை இன்னும் உறுதியாக வெளிப்படுத்தத் தொடங்குவார்கள்.

*22.* சிலர் தங்களுடைய கருத்துக்களுக்கு ஆதரவாக, வேதவசனங்கள் அர்த்தப்படும் காரியத்திற்கு எதிரிடையானதை அர்த்தப்படுத்தும் விதத்தில் அவைகளை விளக்கும் அளவிற்கு துணிவு கொள்கிறார்கள். இவ்வாறாக, முழுமையான வெளிச்சத்திற்கும் அறிவுக்கும் விரோதமாகப் பாவஞ்செய்கிற சில விருப்பத்துணிவுள்ள பாவிகள் "இரண்டாம் மரணத்தை," " நித்திய அழிவாகிய தண்டனையை" அடைவார்கள் என்று வாசித்த பிறகும், இந்த வார்த்தைகள் ஜீவனிலும் வேதனையிலும் நித்தியத்திற்கும் காக்கப்படுவதை அர்த்தப்படுத்துகின்றன என்ற நேரெதிர்மாறான அர்த்தத்தை துணிவுடன் கொடுக்கிறார்கள்.

*23.* மற்றவர்களோ, இதற்கு எதிர்மாறான கருத்தை ஆதரித்து, இரண்டாம் மரணம் என்பது ஒரு

இரண்டாம் ஆசீர்வாதமாகும் என்று கூறுகிறார்கள். மில்லினிய யுக பரீட்சையின் முடிவில், ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவர்களாகிய பயப் படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர் களும், தங்களுடைய ஆவியில் கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக் காரரும், பொய்யருமாக இருக்கிற அனைவரும், பொய்யை விரும்பி, பொய்யை உருவாக்க நாடு பவர்களும் - இவர்கள் எல்லாம் இரண்டாம் மரணத்தில் தள்ளப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, மகிமைக்குள் கொண்டு செல்லப்படுவதை அது அர்த்தப்படுத்துகிறது என்று சொல்கிறார்கள்.

*24.* ஆம், தேவனுடைய திட்டத்தை பற்றிய அறிவினால் பிரகாசிப்பிக்கப்பட்ட அநேகர் இந்த துணிகரமான பாவத்திற்குள் விழக்கூடியவர்களாக இருக் கிறார்கள். சத்தியத்தைப் பற்றிய அறிவினால் தாங்கள் தேவனிடமிருந்து அதிக அனுகூலத்தையும் விசேஷித்த தயவையும் பெற்றுக்கொண்டதை அவர்கள் அங்கீகரித் தாலும், இவ்வாறு பிரகாசிக்கப்பட்டவர்களுக்கு வரக் கூடிய அதிக அபாயத்தைக் குறித்து எச்சரிக்கிற வேத வசனங்களைக் கவனமாகக் கருதி, அவைகளைக் குறித்துத் தியானித்து, அவைகளைக் கடைபிடிப்பதற்குப் பதிலாக *(2 தெச. 1:7-9; எபி. 6:4-8; 10:26-31; 2 பேது. 2:1, 12, 20-22; யூதா 12; வெளி. 2:11; 20:6)*, அவைகளை அசட்டை செய்கிறார்கள். மேலும் துணிவுடன் தங்களுடைய சுய புத்தியைச் சார்ந்து, இவ்வாறு நிதானிக்கிறார்கள்: "தேவன் அன்பாகவே இருக்கிறார்." முழு மனுகுலத் திற்கும் ரட்சிப்பை ஏற்பாடு செய்யும் அளவிற்குத் தேவன் மனுகுலத்தின் மீது அன்புகூருகிறார். இது வரை அவர் களுடைய கருத்து உண்மையாக இருக்கிறது. ஆனால் இதற்குப் பிறகு அவர்கள் வேதவசனங்களை விட்டு விட்டு, தேவனுடைய அன்பு எவ்வளவு வலிமை யுள்ளதாக இருக்கிறது என்றால், விருப்பத்துணிவுடன் கலகம் செய்கிற பாவியையும் ரட்சிக்கும் அளவிற்காகும் என்பதை விசுவாசிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். அவனைச் சீர்திருத்துவதற்கு மில்லினிய யுக காலம் போதாததாக இருந்தால், தேவன் அவனுக்கு மேலும் மேலும் சந்தர்ப்பத்தைக் கொடுப்பார் என்றும், இறுதியாக எல்லோரும் நித்தியத்திற்கும் ரட்சிக்கப்படுவார்கள் என்றும் இவர்கள் கூறுகிறார்கள். இது தேவனுக்கு மகிமை உண்டாக்கும் ஒரு கருத்தாக இருக்கிறது என்றும் கூறுகிறார்கள். ஆனால் தெய்வீக அகத்தூண்டுதலினால் கொடுக்கப்பட்ட சத்தியத்தின் ஏதேனும் ஒரு பகுதியைத் திருத்திக் கூறுகிற அல்லது மறுக்கிற எதுவும் தேவனுக்கு மகிமை உண்டாக்காது.

*25.* விருப்பத்துணிவுடன் பாவம் செய்கிறவர் களின் தண்டனை இரண்டாம் மரணமாகும் என்று பல வசனங்களின் மூலம் வேதாகமம் எச்சரிக்கிறது. மேலும் கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று வேதாகமம் தெளி வாக அறிவிக்கிறது. ஆகையால் முழுமையான அறிவை அடைந்த பிறகும், விருப்பத்துணிவுடன் செய்த பாவங் களுக்காக ஒருவன் இரண்டாம் மரணத்திற்குப் பாத்திர னாகக் காணப்பட்டால், அவனைத் திரும்ப மீட்டுக் கொள்வது கூடாத காரியமாகும். கிறிஸ்துவுக்குள் ஏற் பாடு செய்யப்பட்டிருக்கிற மீட்பானது, பூரணமானதாக வும், முழு மனுகுலத்திற்கு உரியதாகவும் இருக்கிறது. ஆதாமின் கீழ்ப்படியாமையினாலும், அவர் தேவ தய விலிருந்து விழுந்துபோனதினாலும் உண்டான தண்டனை கள் மற்றும் பலவீனங்கள் எல்லாவற்றிலிருந்தும் ஆதாமின் ஒவ்வொரு பிள்ளைக்கும் முழு ரட்சிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விதமான ஒரு ரட்சிப்புக்கான முழுமையான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, ஆதியில் ஆதாமுக்கு இருந் ததைப் போலவே, ஒவ்வொருவனுக்கும் தனிப்பொறுப்பு இருக்கும். விருப்பத்துணிவுடன் கீழ்ப்படியாத ஒவ்வொரு வனுக்கும் அதே தண்டனை, அதாவது மரண தண்டனை அளிக்கப்படும். இவ்வாறு விருப்பத்துணிவுடன் பாவஞ் செய்கிறவன் இரண்டாம் பரீட்சையின் கீழ் தண்டிக்கப் படுவதால், அது இரண்டாம் மரணம் என்று அழைக் கப்படுகிறது. ஏனென்றால் எல்லாரும் முதல் முறையாக ஏதேனில் ஆதாமுக்குள் பரீட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

*26.* இவ்வாறு விருப்பத்துணிவுடன் பாவம் செய் பவர்கள் மேன்மேலும் அகந்தையுள்ளவர்களாகவும், தன்னம்பிக்கையுள்ளவர்களாகவும் ஆகி, மீட்கும் பலியின் அவசியத்தையே மறுப்பார்கள். கிறிஸ்துவின் பலி அவர் களை முதலாம் மரணத்திலிருந்து மீட்டுக்கொள்ள வில்லை என்றும், அவர்கள் கிரயத்திற்குக் கொள்ளப் படவில்லை என்றும், முற்காலத்தில் அவர்கள் அவ்வாறு எண்ணினது தவறான கருத்தாகும் என்றும் அவர்கள் சொல்வார்கள். கிறிஸ்துவின் ஜீவியத்தை பின்பற்றுவதை மட்டுமே தேவ நீதி ஒரு மனிதனிடமிருந்து கோரக்கூடும் என்று சொல்வார்கள். இவ்வாறாக, நம்முடைய மீட்பரும், யாவே தேவனுடைய ஒரே பேறான குமாரருமானவரின் மூலம் யாவே தேவன் கொடுத்த ஈவில் அவர் வெளிப் படுத்தின கிருபையின் ஆவியை நிந்திக்கிறார்கள். அவர் களுடைய சுய நீதி என்னும் அழுக்கான கந்தையை *(ஏசா. 64:6)* அணிந்துகொண்டு நிற்கும் அளவிற்குத் துணிவுக் கொள்கிறார்கள்.

*27.* அவர்களுடைய துணிகரமான கோட் பாட்டை நிரூபிப்பதற்காக இந்தப் பெரிய தப்பறைக்குள் விழுகிறார்கள். ஏனென்றால் ஆதாம் பரீட்சிக்கப்பட்ட போது, பாவத்தின் சம்பளம் மரணமாக இருந்தது என்றும், எந்த ஒருவனும் அந்த தண்டனையிலிருந்து மீட்கப்பட்டு, தேவனுடைய புத்திரனாகச் சுயாதீனம் அடைவதற்கோ, உயிர்த்தெழுவதற்கோ கிறிஸ்துவின் மரணம் அவசியமாக இருந்தது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டால் *(ரோம. 3:24-26; கொலோ. 1:20-22; 1 கொரி. 15:21, 22)*, தேவன் மாறாதவராக இருப்பதால், இரண்டாம் மரண தண்டனைக்குட்பட்ட ஒவ்வொருவனுக்காகவும் ஒரு இரண்டாம் மீட்கும் கிரயம் செலுத்தப்படாமல், இரண் டாம் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட முடியாது என்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கும். ஆகையால், மீட்கும் பலியையே மறுதலிக்கும் அளவிற்குத் துணிவுக்கொள்கிறார்கள்.

*28.* இவ்வாறாகத் துணிகரமான பாவங்கள் நிதானிப்பைச் சீர்குலைத்து, வேத வசனங்களை அவ மாக்கி, "பெரும்பாதகத்துக்கு" கொண்டுசெல்லும். இவ் விதமான கண்ணிகளும், நுணுக்கமான தூண்டுதல்களும் இருப்பதால், பணிவுநயம், மனத்தாழ்மை, தேவனுடைய பரிசுத்த வார்த்தையை உறுதியாகப் பற்றிக் கொள்வது, அதின் கற்பனைகளைத் தியானிப்பது, அவைகளுடைய பரிசுத்தமான மற்றும் மிக முக்கியமான கருத்துக்கள் எல்லாவற்றையும் சிந்திப்பது ஆகியவைகள் மட்டுமே நம்மைப் பாதுகாக்கும் என்று பிரதிஷ்டை செய்த ஒவ்வொருவனும் எப்பொழுதுமே மனதில் கொள் வானாக. "அப்பொழுது" அவன் "உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பான்".

*29.* ஆகையால், "என் கன்மலையும் என் மீட்ப ருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என்

இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதி யாயிருப்பதாக” என்பதே பிரதிஷ்டை செய்த ஒவ்வொருவனின் இடைவிடாத ஜெபமாக இருக்க வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

# ஞானம் மற்றும் துக்கம்

### *(BSQB p. 657-659)*

*1.* **பி**ர. *1 :18* ம் வசனத்தில், “அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன்” என்று நாம் வாசிக்கிறோம். இது உண்மையாயிருந்தால், நாம் அறிவையும் ஞானத்தையும் நாடாமல், அறியாமையிலே இருப்பது அதிக நன்மையானதாக இருக்குமல்லவா?

*2.* இவ்வசனத்தில் சொல்லப்பட்ட அறிக்கை உண்மையானதாக இருக்க வேண்டும். ஏனென்றால் பிரசங்கி புத்தகத்தை எழுத தேவன் தாமே தமது ஆவியினால் சாலொமோனை ஊக்குவித்திருந்தார் (பிர. *1:1,12*). அதுபோலவே நீதிமொழிகளில் பெரும்பான்மை யானவைகளை எழுதவும் தேவன் சாலொமோனை ஊக்குவித்திருந்தார். அவைகளில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: “ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள்”; “முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல”; “நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்; மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள்” (நீதி. *4:7; 8:11; 10:21*). தேவனுடைய வார்த்தை ஒரு போதும் தன்னில் தானே முரண்பாடாக இல்லாதிருப்பதால் பிரசங்கி புத்தகத்தில் சொல்லப்பட்ட இந்த அறிக்கையும், நீதிமொழிகளில் சொல்லப்பட்ட இந்த அறிக்கைகளும் வெவ்வேறான கண்ணோட்டங்களிலிருந்து எழுதப் பட்டிருக்க வேண்டும்.

*3.* பிரசங்கி புத்தகத்தை எழுதும்போது சாலொமோன் ஒரு வகுப்பாராக மூப்பரான பாத்திரவான்களை (ஆபேல் முதற் கொண்டு யோவான் ஸ்நானன் வரை; எபி. *11;* மத். *11:11*) அடையாளப்படுத்துகிறார் என்று மனதில் கொள்ளும் போது இந்த காரியம் தெளிவாகும். இந்த புத்தகத்தில் சாலொமோன் கொடுக்கிற சிந்தனைகள், ஆதாமினால் வந்த பாவம் மற்றும் மரணத்தின் சாபத்தின் கீழ் மூப்பரான பாத்திரவான்களும் மற்றவர்களும் பெற்றுக் கொள்கிற பல்வேறு அனுபவங்களின் மாயையைக் குறித்தும் வெறுமையைக் குறித்தும், அந்த அனுபவங்கள் ஏன் அனுமதிக்கப்பட்டன என்பதைக் குறித்தும் அவர்கள் நிதானிக்கும் போது அவர்களுக்கு வந்த சிந்தனைகளை அடையாளப்படுத்துகின்றன. ஆகையால் பிரசங்கி புத்தகமானது, சாபத்தின் கீழ் இவ்விதமான வீணான வெறுமையான (மாயை) அனுபவங்கள் ஏன் அனுமதிக்கப்பட்டன என்பதைப் பற்றிய ஒரு முழுமையான பதிலைக் கொடுக்காமல், மூப்பரான பாத்திரவான்கள் புரிந்து கொண்ட பதிலை மட்டுமே கொடுக்கிறது.

*4.* யூத யுக அறுவடை காலம் வரை (நம்முடைய கர்த்தரின் முதல் வருகைக்குப் பிறகு), இன்னும் விசேஷமாகச் சுவிசேஷ யுக அறுவடை காலம் வரை இந்த கருத்து அதின் முழுமையில் புரிந்து கொள்ளப்படாதிருந்தது. ஆனால் பிரசங்கி *12:13,14*-ம் வசனங்களில் குறிப்பிடப்பட்டதைப் போல் பின்வரும் காரியங்களைக் காணும்



அளவிற்கு மூப்பரான பாத்திரவான்கள் இந்த காரியத்தைப் புரிந்து கொண்டார்கள்: *(1)* சாபத்தின் கீழ் மனுஷன் பெறுகிற அனுபவத்தின் நோக்கமானது, சாபத்தின் கீழுள்ள பூமிக்குரிய காரியங்கள் மற்றும் வேலைகளெல்லாம் வீணானவைகள் என்று அவனுக்குப் போதிப்பதேயாகும், *(2)* அதன் மூலம் தேவனிடத்தில் போற்றித் துதிக்கும் பயபக்தியைக் கற்றுக் கொண்டு, அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இதைச் செய்ய எல்லா மனுஷரும் தேவனுக்குக் கடன்பட்டிருக்கிறார்கள்.

*5.* நம்முடைய கேள்விக்குப் பதிலைப் பெறுவதற்கு மேலே சொல்லப்பட்ட கண்ணோட்டத்தை மனதில் கொள்வது ஏற்றதாயிருக்கும். பிர. *1:18*-ம் வசனத்திற்கு முன்பு வருகிற வசனங்களின் சூழ்நிலைகளைக் கவனிப்போம்:

*6.* பிர. *1:1-3* தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள். மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?

*7.* இந்த புத்தகத்தின் வார்த்தைகள் மூப்பரான பாத்திரவான்களின் போதனைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அவர்கள் பழைய ஏற்பாட்டின் காரியங்களில் தேவனுடைய செயலதிகாரிகளாக இருந்தார்கள் *(1:1)*. அவர்களுடைய போதனையின் முக்கியமான கருத்து பொருளில் ஒன்று, சாபத்தின் கீழுள்ள பூமிக்குரிய காரியங்களோடு இருக்கிற அனுபவங்கள் எல்லாம் முற்றிலும் வெறுமையானவைகள் என்பதாகும். அவர்களுடைய வாழ்க்கையின் காரியங்களைக் குறித்துச் சிந்தித்து இந்த முடிவுக்கு வந்தார்கள் *(1:2)*. மூப்பரான பாத்திரவான்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, சாபத்தின் கீழ் வாழ்கிற ஒருவன் படுகிற பிரயாசத்திலிருந்து அவனுடைய வாழ்க்கையின் முடிவில் என்ன லாபத்தை அடைகிறான் *(1:3)*?

*8.* பிர. *1:4-7* ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது. சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது; தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது. காற்று தெற்கே போய், வடக்கேயுஞ்சுற்றி, சுழன்று சுழன்று அடித்து, தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும். எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.

*9.* ஒவ்வொரு தலைமுறையின் அநித்தியமான தன்மையைப் பூமியின் நிலையான தன்மையோடு அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள் *(1:4)*. சூரியன் அதின் பாதையில் தொடர்ந்து செல்வதையும்*(1:5)*, காற்று அதற்கு நியமிக்கப்பட்ட திசையில் தொடர்ந்து சுழன்று கொண்டிருப்பதையும் *(1:6)*, நீரானது நீராவியாகவும் மேகங்களாகவும் மழையாகவும் தோன்றி அதற்குப் பிறகு சிற்றாறுகள், நீரோடைகள், நதிகள், ஏரிகள் மற்றும் சமுத்திரங்கள் வழியாகச் சென்று இந்த செயல்முறைகளை நிரந்தரமாக என்றென்றைக்கும் செய்வதையும் *(1:7)* அவர்கள் கவனித்தார்கள்.

*10.* பிர. *1:8-11* எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; அது மனுஷரால் சொல்லிமுடியாது; காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை. இதைப் பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே. முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை; அப்படியே பின்வரும் காரியங்களைப்பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது.

*11.* அவர்கள் பின்வரும் காரியங்களைக் குறித்துத் தியானித்தார்கள்: *(1)* உழைப்பினால் உண்டாகுகிற மிகுதியான வருத்தம் - அது வார்த்தைகளில் விவரிக்க முடியாததாக இருக்கிறது, *(2)* அவர்கள் காண்கிற மற்றும் கேட்கிற காரியங்களின் திருப்தியளிக்காத தன்மை *(1:8)*, *(3)* திரும்பத் திரும்ப அதே காரியங்கள் நீடித்திருப்பது, திரும்பத் திரும்ப அதே காரியங்கள் செய்யப்படுவது, *(4)* இயற்கையில் எவ்வித புதிதான சக்திகளும் இல்லாதிருப்பது *(1:9,10)*, *(5)* ஒருவனுடைய காலத்திற்கு முன் நிகழ்ந்த காரியங்களை அவன் நினைவு கூருவதில்லை, அவனுடைய நாட்களுக்கு பிறகு நிகழுபவைகளைக் குறித்துச் சிந்திக்கவும் முடியாது *(1:11)*.

*12.* பிர. *1:12-15* பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரயேலருக்கு ராஜாவாயிருந்தேன். வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்குத் தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார். சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. கோணலானதை நேராக்கக்கூடாது; குறைவானதை எண்ணி முடியாது.

*13.* பழைய ஏற்பாட்டு காலங்களில் தேவனுடைய ஜனங்களுக்காகத் தேவனுடைய செயலதிகாரிகளாக இருந்த மூப்பரான பாத்திரவான்கள் *(1:12)* இந்த பூமியிலுள்ள அறிவைப் பற்றிய காரியங்களை ஆராய விரும்பினார்கள், ஆனால் அது அவர்களுக்குச் சோர்வூட்டும் ஒரு வேலையாக இருந்தது *(13)*. இந்த சிந்தனைகளெல்லாம், இந்த காரியங்களின் வெறுமை மற்றும் அதிருப்தியான தன்மையைப் பற்றின ஓர் உணர்வை இறுதியாக அவர்களுடைய மனதிற்குக் கொண்டு வந்தது *(14)*. மேலும் மனுஷனுடைய சீர்கேட்டைச் சீர்திருத்துவதும் அவனில் குறைவுப்பட்டுள்ள காரியங்களை எண்ணுவதும் கூடாத காரியமென்று உணர்ந்தார்கள் *(15)*.

*14.* பிர. *1:16 -18* இதோ, நான் பெரியவனாயிருந்து, எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன். ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோகம்பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன். அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன்.

*15.* அடுத்தடுத்த தலைமுறைகளில் அவர்கள் தங்களுடைய சொந்த நிலையைக் குறித்துச் சிந்திக்கும் போது, அவர்கள் தங்களுடைய முன்னோர்களை விட அதிக சிலாக்கியத்தையும் அறிவையும் ஐசுவரியமாகப் பெற்றுக் கொண்டதை உணர்ந்தார்கள். மேலும் தேவ வார்த்தை சம்பந்தமாக அவர்கள் இருதயத்தில் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் மேன்மையையும் உணர்ந்தார்கள் *(16)*. அவர்கள் சத்தியம், மூடநம்பிக்கை, தப்பறை ஆகியவைகள் சம்பந்தப்பட்ட காரியங்களைச் சரியாக மதித்துணரக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் இந்த காரியங்களைக் குறித்துச் சிந்திப்பது பல மனரீதியான கஷ்டங்களை உண்டாக்குகிறது என்று முடிவு செய்தார்கள் *(17)*. சாபத்தின் காரணமாக அதிக சத்தியத்தினால் அதிக துக்கமுண்டாகுகிறது என்று அவர்கள் கண்டு கொண்டார்கள். ஏனென்றால் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தினால் தெளிவாக்கப்படாமல், ஒருவன் சாபத்தைப் பற்றிய தன்னுடைய புரிந்து கொள்ளுதலை அதிகரித்துக் கொண்டால், அது அவனுடைய துயரத்தை பெரிதும் அதிகரிக்கச் செய்யும் *(18)*.

*16.* இவ்வாறாகப் பழைய ஏற்பாட்டிலுள்ள *(சந்திரன்)* ஞானம் மற்றும் அறிவிலிருந்து பிரதிபலிக்கிற வெளிச்சமானது, புதிய ஏற்பாட்டிலுள்ள *(சூரியன்)* ஞானம் மற்றும் அறிவின் வெளிச்சத்தைச் சார்ந்திருக்கிறது என்று நாம் காண்கிறோம். யெஷுஆ மரணத்தைப் பரிகரித்து அதின் சாபத்திலிருந்து நம்மை இரட்சித்து, *"அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு"* நம்மை அழைத்திருக்கிறார் என்ற ஞானத்தையும் அறிவையும் நாம் புதிய ஏற்பாட்டிலிருந்து பெற்றுக் கொள்கிறோம் *(2 தீமோ. 1:9, 10; 1 பேது. 2:9)*. சுவிசேஷ யுக சபையானது *"சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதத்தின் கீழ் சந்திரன் … இருந்தது" (வெளி. 12:1 - பழைய ஏற்பாடு நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரமாயிருக்கிறது)*.

*17.* பிரசங்கி புத்தகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நீதிமொழி புத்தகமானது வித்தியாசமான, இன்னும் உயர்வான கண்ணோட்டத்திலிருந்து ஞானத்தைக் குறித்தும் அறிவைக் குறித்தும் தீர்க்கதரிசனமாகச் சொல்கிறது. தேவஞானமுமாயிருக்கிற கிறிஸ்து யெஷுஆவுக்குள் *(1கொரி.1;24)* "ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது *(கொலோ.1:19; 2:3)*. நமக்கு விசேஷமான சந்தோஷத்தை உண்டாக்கும்படிக்கு, "எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும்" கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்துகிற இவைகள், தேவனுடைய "அநந்த ஞானமாக" இருக்கின்றன *(கொலோ. 1:9, 10; எபே. 3:10)*. அவர் நமக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது *(யோவா.6:63)*.

*18.* இதுவே நீதிமொழி புத்தகத்தில் சொல்லப்பட்ட ஞானம் மற்றும் அறிவாகும். அது பிரசங்கி புத்தகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது.

நீதி. 2:1 -11 வரையுள்ள வசனங்கள் தேவனுடைய ஜனங்களின் இந்த விலையேறப் பெற்ற சுதந்தரத்தை எவ்வளவு அழகாக வர்ணிக்கிறது. நாம் அதின் மதிப்பை ஒரு போதும் குறைக்காதிருப்போமாக. அதை எப்போதுமே ஆர்வமாக நாடி தக்க வைத்துக் கொள்வோமாக (நீதி. 3:13-24; 4:5-9; யாக். 1:5; 3:13-18). "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய யெஷுஆ கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும்" நாம் வளரும்போது, இந்த ஞானத்தை விலையேறப்பெற்ற பொக்கிஷமாகக் காத்துக் கொள்வோமாக. அப்பொழுது நாம் யெஷுஆ கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க மாட்டோம். இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய யெஷுஆ கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் (2 பேது.3:18; 1:8,11).

★★★★★★★★★★★★★★★★★★★★★

# உங்கள் கல்வி இவைகளில் குறைவுபட்டிருக்கிறதா?

*BS# 287, Feb. 1960, p.14,15*




1. **வா**சிப்பு (Reading) – நீங்கள் "[வேதவசனங்களை] வாசிக்கையில் ... அறிவை அறிந்துகொள்ளும்படிக்கு" (எபே. 3:5; அப். 8:30), "வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும்," தேவன் ஏற்படுத்தியிருக்கிற உதவிகளை உபயோகிப்பதிலும் ஜாக்கிரதையாயிராவிட்டால் (1 தீமோ. 4:13), உங்கள் கல்வி வாசிப்பில் குறைவுபட்டிருக்கிறது.

2. எழுதுதல் (Writing) – நீங்கள் கொடுமையான, முறைகேடான, வேடிக்கையான, தேவனை அவமதிக்கும் காரியங்களை எழுதினாலும் (ஏசா. 10:1), தேவனுடைய அன்பின் நியாயப்பிரமாணத்தை உங்கள் இருதயத்தில் எழுதத் தவறி (ரோம. 2:14, 15; நீதி. 7:1-3), மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினால் எழுதப்பட்டு, சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படும் நிருபமாக இராவிட்டால் (2 கொரி. 3:2, 3) உங்கள் கல்வி எழுதுதலில் குறைவுபட்டிருக்கிறது.

3. எண்கணிதம் (Arithmetic) – நீங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, உங்கள் நாட்களை எண்ணவும் (சங்.90:12), கிறிஸ்துவின் சாயலின் மற்ற பண்புகளை உங்கள் விசுவாசத்தோடு கூட்டவும் (2 பேது.1:5-9) கற்றுக்கொள்ளாவிட்டால், உங்கள் கல்வி எண்கணிதத்தில் குறைவுபட்டிருக்கிறது.

4. அளவைக் கணிதம் (Mensuration) – நீங்கள் தேவ வார்த்தையின் தரத்தின்படி உங்களை அளந்து கொள்ளாமல் (யாக். 1:21-25), மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டு, மனுஷரின் தரத்தின்படி உங்களை அளந்து கொண்டால் (2 கொரி. 10:12-18) உங்கள் கல்வி அளவைக் கணிதத்தில் குறைவுபட்டிருக்கிறது.

5. வடிவியல் கணிதம் (Geometry) - தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படும்படிக்கு நீங்கள் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணராவிட்டால் (எபே. 3:18,19), உங்கள் கல்வி வடிவியல் கணிதத்தில் குறைவுபட்டிருக்கிறது.

6. எழுத்துகளைக் கூட்டிப்படித்தல் (Spelling)- சங். 145:20-ம் வசனத்தில் ("கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்") "அழிப்பார்" என்ற சொல்லின் எழுத்துகளை நீங்கள் வா-தி-ப்பா-ர் என்று கூட்டிப் படித்தால்; சங். 37:38-ம் வசனத்தில் (அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப் படுவார்கள்; அறுப்புண்டுபோவதே துன்மார்க்கரின் முடிவு") அழிக்கப்படுவார்கள் என்ற சொல்லின் எழுத்துகளை வா-தி-க்க-ப்ப-டு-வா-ர்-க-ள் என்று கூட்டிப் படித்தால்; யாக். 1:15-ம் வசனத்தில் ("பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்") "மரணத்தை" என்ற சொல்லின் எழுத்துகளை நி-த்-தி-ய-வே-த-னை-யை என்று கூட்டிப் படித்தால்; எசே.18:4,20-ம் வசனங்களில் ("பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்") என்ற சொல்லின் எழுத்துகளை அ-க்-கி-னி-யி-ல்-ஜீ-வி-ப்-ப-து என்று கூட்டிப் படித்தால், உங்கள் கல்வி எழுத்துகளைக் கூட்டிப்படித்தலில் குறைவுபட்டிருக்கிறது.

7. சொல்லிலக்கணம் (Grammar) - உயிர்த்தெழுதலைக் குறிப்பிடுகிற 1 கொரி.15:37-ம் வசனத்தில் (இனி உண்டாகும் மேனியை <u>விதையாமல்</u>), சொல்லின் பொருளில் மாற்றத்தை உண்டாக்குகிற (modifier) "இல்லாமல்" என்ற வார்த்தையை விட்டுவிட்டு, "இனி உண்டாகும் மேனியை விதைக்கிறாய்" என்று தவறாகப் படித்தால் உங்கள் கல்வி சொல்லிலக்கணத்தில் குறைவுபட்டிருக்கிறது. அல்லது ஆதி.3:4- ம் வசனத்தில், சாத்தான் தேவனை எதிர்த்து "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொல்வதைப் படிக்கும்போது, "இல்லை" என்ற வார்த்தையைக் கவனிக்கவேண்டும். அப்படி கவனிக்கவில்லையென்றால், எவனை யெஷுஆ பொய்யன் என்று அழைக்கிறாரோ (யோவா.8:44) அந்த சாத்தானை உண்மை சொல்கிறவனாக ஆக்கிவிடுவீர்கள் (ஆதி.2:17-ம் வசனத்தில் "நீ சாகவே சாவாய்" என்று தேவன் சொல்வதுதான் உண்மை), இவைகளைக் கவனிக்கவில்லையென்றால் உங்கள் கல்வி சொல்லிலக்கணத்தில் குறைவுபட்டிருக்கிறது.

8. பாஷை (language) - இந்த மகா உபத்திரவ காலத்திற்குப் பிறகு, தெரிந்துகொள்ளப்படாத உலகத்தாரும் ("மற்ற மனுஷரும்" - அப்.15:16,17) கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, தேவன் அவர்களுக்கு அருளப்போகிற ஒரே விசுவாசமும் (எபே. 4:5), ஒரே பாஷையுமாகிய " சுத்தமான பாஷையை" [சாத்தானுடைய தப்பறைகளினாலும், மனுஷ பாரம்பரியங்களினாலும் கறைப்படுத்தப்படாத சுத்தமான சத்திய வார்த்தை] நீங்கள் இன்னும் கற்றுக்கொள்ளாவிட்டால், உங்கள் கல்வி பாஷையில் குறைவுபட்டிருக்கிறது.

9. புவியமைப்பியல் (Geology) - நித்திய கன்மலையாகிய யாவே தேவனை (உபா. 32:4; ஏசா. 26:4)

நீங்கள் அறிந்துகொள்ளாவிட்டால், புவியமைப்பியலில் குறைவுபட்டிருக்கிறீர்கள்.

*10.* கனிமவியல் *(Mineralogy)* - வெள்ளி என்பது பொதுவாக சத்தியத்தை அடையாளப்படுத்த உபயோகிக் கப்படுகிறது என்றும் (சங். 12:6; லூக்.15:8; 1 கொரி. 3:12), அதின் தூய்மை காக்கப்படாவிட்டால் அது களிம்பாக மாறும் என்றும் (ஏசா.1:22) நீங்கள் அறிந்துகொள்ளா விட்டால் உங்கள் கல்வி கனிமவியலில் குறைவு பட்டிருக்கிறது.

*11.* சரித்திரம் *(history)* - நமக்குப் போதனை யாகவும், புத்திமதியாகவும் (ரோம. 15:4), திருஷ்டாந் தங்களாகவும் அல்லது அடையாளங்களாகவும் (1 கொரி. 10:11) முன்பு எழுதியிருக்கிறவைகளை நீங்கள்கற்றுக் கொள்ளாவிட்டால், உங்கள் கல்வி சரித்திரத்தில் குறைவுபட்டிருக்கிறது.

*12.* சமூக அறிவியல் *(Sociology)* - மனுகுலத்தின் பாவத்திற்காகத் தேவன் ஏற்படுத்தின நிவாரணமாகிய அவருடைய குமாரராகிய யெஷுஆ கிறிஸ்துவின் ரத்தத்தின் புண்ணியத்தை தவிர (1 யோவா. 1:7; கொலோ. 1:19, 20; அப். 4:12) மற்ற ஏதேனும் ஒரு நிவாரணத்தை (சமுதாய மேம்பாட்டிற்காக) நீங்கள் நாடினால், உங்கள் கல்வி சமூக அறிவியலில் குறைவுபட்டிருக்கிறது.

*13.* தாவரவியல் *(Botany)* - மெய்யான திராட்சச் செடியை (யோவா.15:1) நீங்கள்கண்டுகொள்ளவில்லை என்றாலும், கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்ட வர்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப் பார்கள் என்றும் (சங்.92:12,13), தேவன் நடாத நாற் றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் என்றும் (மத்.15:13) நீங்கள் கற்றுக்கொள்ளாவிட்டாலும் உங்கள் கல்வி தாவரவியலில் குறைவுபட்டிருக்கிறது.

*14.* விலங்கியல் *(Zoology)* - தேவன் பூச்சியையும், புழுவையும் (அக்கினியையும் கூட) முழுமையான, பூரணமான, நித்தியமான அழிவின் (நிர்மூலமாக்குதலின்) ஒரு உருவகமாக உபயோகிக்கிறார் என்றும் (ஏசா. 66:24; மாற். 9:44, 46, 48), புழு சாவாமலிருக்கும் இடமாகிய கெஹென்னாவைக் குறித்து யெஷுஆ சொன்னபோது, சொல்லர்த்தமான புழுக்கள் சாவாமையுடையவைகள் என்று அவர் போதிக்கவில்லை என்றும் நீங்கள் அறிந்து கொள்ளாவிட்டால், உங்கள் கல்வி விலங்கியலில் குறைவுபட்டிருக்கிறது.

*15.* உடல் இயங்கியல் *(Physiology)*- தேவனோடு இசைவாக இல்லாத ஒருவனின் இருதயமே திருக் குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என்பதையும் (எரே. 17:9), மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத் தைச் சுதந்தரிக்கமாட்டாது என்பதையும் (1 கொரி.15:50), யெஷுஆ சீஷர்களுக்கு தம்மை காட்சியளித்தபோது அவர் உருவாக்கியிருந்த மாம்சமும் எலும்புகளும் ஒரு ஆவி ஜீவிக்கு இராது (லூக். 24:39) என்பதையும் நீங்கள்மறுத்தால், உங்கள் கல்வி உடல் இயங்கியலில் குறைவுபட்டிருக்கிறது.

*16.* வேதியியல் *(Chemistry)* - சீர்த்திருத்தல் மற்றும் சுத்திகரிப்பிற்கான மற்ற எல்லா வழிகள் (அவைகள் உவர்மண்ணினாலும், சவுக்காரத்தினாலும் அடையாளப்படுத்தப்படுகின்றன) எவ்வளவு வலுவான வைகளாக இருந்தாலும் (நல்ல கிரியைகள் போன்ற வைகள்), அவைகள் நம்மைத் தேவனுக்கு முன்பாக நியாயமாக்குவதில்லை என்று உணராமல் (எரே. 2:22; ரோம. 3:20), சிவேரென்றிருக்கிற உங்கள் பாவங்களை உறைந்த மழையைப்போல் வெண்மையாக்குவதற்கான ஒரே செயல்முறையாகிய யெஷுஆவின் பலி புண்ணியத்தை (வெளி. 1:6; 7:14)நீங்கள் உபயோகிக்க வில்லை என்றால் (ஏசா.1:18), உங்கள் கல்வி வேதியியலில் குறைவுபட்டிருக்கிறது.

*17.* கட்டடக்கலை *(Architecture)* - யெஷுஆ கிறிஸ்துவை தவிர மற்ற ஏதேனும் ஒரு அஸ்திபாரத்தின் மேல் நீங்கள் கட்டக்கூடும் என்று எண்ணினாலும், அல்லது நீங்கள் எவ்வாறு, எந்த பொருள்களைக் கொண்டு கட்டுகிறீர்கள் என்பதை கவனிக்காதிருந்தாலும் (1 கொரி. 3:10-12), தேவன் செய்த ஏற்பாடுகளுக்கு விரோதமாக நீங்கள் கட்டினால் உங்கள் பிரயாசம் விருதா என்று நீங்கள் உணரவில்லை என்றாலும் (சங். 127:1) உங்கள் கல்வி கட்டடக்கலைகளில் குறைவுபட்டிருக் கிறது.

*18.* புவியியல் *(Geography)* - பூமியின் மேல் வர விருக்கும் ராஜ்யத்தின் (மத். 6:10; வெளி. 5:10) தலை நகரமாக எருசலேம் இருக்கும் என்றும் (ஏசா. 2:3; எரே. 3:17), அந்த ராஜ்யத்தின் எல்லைகள் பூமியின் கடை யாந்தரம் மட்டும் இருக்கும் என்றும் (சங். 2:8; 72:8; சக. 14:9; தானி. 2:34, 35, 44, 45) நீங்கள் கற்றுக்கொள்ளா விட்டால், உங்கள் கல்வி புவியியலில் குறைவுபட்டிருக் கிறது.

*19.* வானியல் *(Astronomy)* – நீங்கள் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரத்திற்காகத் (வெளி. 22:16; 2 பேது. 1:19) தேடாவிட்டால், உங்கள் கல்வி வானியலில் குறைவு பட்டிருக்கிறது.

*20.* இசை *(Music)* – நீங்கள் உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத் திரித்துக் கொண்டும் (எபே. 5:19,20), மோசேயின் பாடலை யும் [மனிதனுக்கு ஆதியில் இருந்த பூரணத்துவம், அவனுடைய வீழ்ச்சி, சாபம், தீமை அனுமதிக்கப்படுவது, இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் ஆகியவற்றைப் பற்றிய போதனை - இதைப் பிரதானமாக பழைய ஏற்பாட்டில் காண்கிறோம் - சங். 90], ஆட்டுக்குட்டியானவரின் பாடலையும் [(சபையின் ரட்சிப்பைப் பற்றிய காரியங்கள் - இதைப் பிரதானமாகப் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம்) - பொதுவாகச் சொன்னால், உலகத்தின் மற்றும் சபையின் ரட்சிப்பு - 1 தீமோ. 2:3-6; 4:10; 1 யோவா. 2:2; வெளி. 15:3, 4)] பாடாவிட்டால், உங்கள் கல்வி இசையில் குறைவு பட்டிருக்கிறது.

*21.* உடற்பயிற்சி *(Gymnastics)*- நீங்கள் தேவ னுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்ற மற்ற மனச்சாட்சியை உடையவர்களாகயிருக்கவும், தேவ பக்தி உடையவர்களாகயிருக்கவும் முயற்சி செய்யாமல், சரீரமுயற்சியில் மட்டுமே ஈடுபட்டால் (அப். 24:16; 1 தீமோ. 4:7,8), உங்கள் கல்வி உடற்பயிற்சியில் குறைவு பட்டிருக்கிறது.

*22.* வேளாண்மையியல் *(Agriculture)* - ஒவ்வொரு ஏற்ற காலத்தில் நீர்வளம் பொருந்திய இடங் களிலெல்லாம் “ராஜ்யத்தின் வசனம்” என்னும் நல்ல விதையை (மத். 13:19) விதைக்கிறவர்கள் பாக்கிய வான்கள் (ஏசா. 32:20; பிர. 11:6) என்றும், விளையச் செய்கிறவர் தேவன் என்றும் நீங்கள் கற்றுக் கொள்ளாவிட்டால் (1 கொரி. 3:6,7), உங்கள் கல்வி வேளாண்மையியலில் குறைவுபட்டிருக்கிறது.

# ஞானஸ்நான ஆராதனை

தேவனுடைய மிகுந்த கிருபையினாலே *27.12.2025* அன்று சனிக்கிழமை காலை *9.00* மணியளவில் பிரதிஷ்டையை நீர் முழுக்கினால் அடையாளப்படுத்தும் ஞானஸ்நான ஆராதனை நடைபெற்றது. அன்றைய தினம் லண்டனை சேர்ந்த சகோதரி கிருத்திகா மற்றும் கோயம்புத்தூர் எக்லீஷியாவைச் சேர்ந்த சகோதரர்கள் ரஸல் வைகிளிஃப் மற்றும் ரேனஸ் வால்டோ ஆகியோர் கர்த்தருடைய கிருபையினாலும், பெலத்தினாலும் தங்கள் பிரதிஷ்டையை நீர் முழுக்கினால் அடையாளப் படுத்தினார்கள்.

அவர்களுக்கு *Br.* சபேஷ்குமார் உதவி செய்ய *Br.* தமிழரசன் ஞானஸ்நானம் கொடுத்தார். மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தை சேர்ந்த சத்திய சகோதர, சகோதரிகளால் இந்த ஞானஸ்நான ஆராதனை நடத்தப்பட்டது. இந்த பிரதிஷ்டையின் ஆராதனையிலும், அதனை தொடர்ந்து சத்திய தியான கூடுகையிலும் பெங்களூரு, சென்னை, திருவள்ளூர், சேலம், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் புதுச்சேரி சேர்ந்த சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டனர். இந்த ஐக்கிய கூடுகையில் “யெஷுஆவை பின்பற்றுதல்” என்ற பாட கருத்தில் *Br.*தீபக் பாரதி அவர்கள் சத்திய செய்தியை கொடுத்தார்.

இந்த சத்திய பாட வகுப்பில் பிரான்ஸ், துபாய், மும்பை, பெங்களூரு, சென்னை, திருவள்ளூர் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த சகோதர, சகோதரிகள் *Zoom* மூலம் கலந்து கொண்டனர்.

கிறிஸ்துவுக்குள் தங்களை ஒப்புக்கொடுத்த சகோதர, சகோதரிகள் தங்களது பிரதிஷ்டையில் முன்னேகி தேவனண்டையில் மென்மேலும் கிட்டிச்சேர அவர் தாமே பாதுகாத்து, வழிநடத்துவாராக.

*உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான் (சங்கீதம் 91:1).*



**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது.**

*சங். 103:2 ,5*

## பெங்களூரு கன்வென்ஷன்

கர்த்தருக்குச் சித்தமானால்
“மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்”
சகோதர ஐக்கியக் கூட்டம் , பெங்களூரில்
ஆகஸ்ட் மாதம் 21, 22 & 23 தேதிகளில்
(வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறும்.
“தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்
விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை
இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்”



***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது


## புது உடன்படிக்கை

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*